# 3000 பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு ஜனவரியில் நியமனம்


Registered as a N

விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 320
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 14 ஷவ்வால் 29 செவ்வாய்க்கிழமை (29-12-70)



நவநாகரிக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன. 444
தந்தி. 'இரத்தினமஸ்'
50.கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


கோட்டை, திங்கள்

அடுத்த கல்வி பொது ஆண்டில் பாடசாலைகள் ஆரம்பமாகும்போது 3000 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

இவ்வாசிரியர்கள் யாவரும் நாட்டிலுள்ள 25 ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்றப்பட்டவர்களாவர். நாட்டில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு மேற்படி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். அநேகமாக கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளிலேயே இவர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள். மேலும் ஒரு ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாத்தறையில் அடுத்தாண்டு திறக்கப்படவிருக்கிறது.

# மார்ச் முதல் திகதி இந்திய ஆட்சிமன்ற இடைத்தேர்தல்

## ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டதை தொடர்ந்து தேர்தல் அதிகாரி தகவல்

புதுடில்லி, டிச. 28

இந்தியாவின் இடைக்காலத் தேர்தல் 1972ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ம் திகதி அல்லது மார்ச் 1ம் திகதி நடைபெறலாம் என்று இந்திய தேர்தல் கமிஷனர் திரு எஸ் பி சென்வர்மா இன்று பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இப்பொழுது தேர்தல் நடத்துவதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். மாநிலத் தேர்தல் அதிகாரிகளைக் கலந்தாலோசிக்க விருக்கின்றேன் இவ்வாரம் நான் அவர்களைச் சந்திக்கலாம் இவர்களைச் சந்தித்த பின்பு தேர்தல் நடத்துவதற்கான ஒரு தேதியை நான் திடமாக அறிவிக்கமுடியும்: சில மாநிலங்களில் தேர்தல் நடத்தி முடிக்க ஒரு நாளுக்கு மேல் எடுக்கக்கூடும். அடுத்த வருடம் நிதியாண்டு மார்ச் 31ம் திகதியாக இருப்பதினால் அதற்கிடையில் தேர்தலை நடத்தி தேர்வு முடிக்க வேண்டும்: ஆகையால் மார்ச் நடுப்பகுதிக்கு முன்பாக முன்பாக தேர்தலை நடத்தி முடிவுகள் அறிவித்தல் வேண்டும்.

மேற்கு வங்காள சட்டசபைக்கான இடைத் தேர்தல்பற்றி நிருபர்கள் கேட்டபொழுது இவை பற்றித் தனக்கு அரசிடமிருந்து இதுவரை எவ்வித அறிவித்தலும் கிடைக்கவில்லை என்றும், உரிய நேரத்தில் அரசிடமிருந்து உத்தரவு வரும் பட்சத்தில் லோக்சபை இடைத் தேர்தலுடனேயே மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலையும் நடத்தி முடிக்கலாமென அவர் தெரிவித்தார்.

(மேலதிக விபரங்களை 3ம் பக்கம் பார்க்க)

## கரவெட்டி கொலை வழக்கில் ஜெயக்கொடி எம்.பி. சாட்சியம்

வல்வெட்டித்துறை, திங்கள்

"ஒரு நாள் நான் இந்தக் கோட்டிற்கு வழக்கொன்றுக்கு வந்திருந்த சமயம் இந்த வழக்கின் சார்பில் ஆஜராகியிருக்கும் புறக்டர் பாலேந்திரன் மூலம் கொலை நடந்த நேரம் பற்றி அறிந்த போது. அந்த நேரத்தில் நான் இரண்டாவது எதிரியை கிளிநொச்சியில் கண்ட ஞாபகம் இருக்கிறது என புறக்டர் பாலேந்திரனுக்கும் அன்று இந்தக்கோர்ட்டில் சமூகமளித்திருந்த காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரீண்டனுக்கும் சொன்னேன்" என உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி பருத்தித்துறை பதில் நீதிபதி திரு. கே. இரத்தினசிங்கம் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

மைல் ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது அலங்கரிக்கப்பட்ட டிராக்டர் வண்டியொன்றில் நானும் திருவாளர்கள் ஆலாலசுந்தரம், கே. பி. இரத்தினம், நேமிநாதன் ஆகியோரும் அழைத்து வரப்பட்டோம் நாங்கள் எல்லோரும் அபேட்சகர்கள் அந்த நேரத்தில் திரு. ஆலாலசுந்தரம் வீதியின் ஓரத்தில் நின்ற 2-வது எதிரிக்குக் கையைக் காட்ட அவரும் கையைக் காட்டினார் அப்பொழுது நேரம் 9 1/2 மணி அல்லது 10மணிக்கு இடையில் தான் இருக்கும் 2-வது எதிரி நின்ற இடத்திற்கும் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கும் ஏறக்குறைய 150 யார் தூரம் இருக்கும்.

பிறகு ஒரு நாள் 2-எதிரி கரவெட்டி கொலை வழக்கில்

## "தமிழ் மக்களை நாம் ... குறை நீங்கிய

## ஜனத்தொகை கணக்கெடுப்பு

கோட்டை, திங்கள்

1971ம் ஆண்டுக்கான இலங்கை ஜனத்தொகை வீடமைப்புத் தொடர்பான கணக்கெடுப்பு ஜனவரி மாதம் முதலாந் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இக்கணக்கெடுப்பின் முதல் அம்சமாக வீடுகள், பெரிய கட்டிடங்கள் முதலியவை கணக்கெடுக்கப்படும். கணக்கெடுப்பின்போது வீடுகளுக்கு முன்புறம் புள்ளடி அடையாளம் இடப்படும். இந்த அடையாளத்தை 1971ம் ஆண்டுவரை அழிக்கப்படாதெனவும் நாட்டில் உள்ள பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

முற்றுமுழுதான கணக்கெடுப்பு 1971ம் ஆண்டு ஜூலை மாதம் முடிவடையும்.

......

## ரூபா 10 லட்சம் பொருட்கள்

### பாக். தூதரிடம் கையளிப்பு

கொழும்பு, திங்கள்

பாகிஸ்தானில் இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக இலங்கை இன்று 10 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைக் கையளித்தது தேயிலை, துணி வகைகள் போன்ற பொருட்களை இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் திரு. ஷவாக்கிடம் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி கையளித்தார்

......

கல்முனை

## கூ. சமாசங்கள் புனரமைப்பு

சாய்ந்தமருது, திங்கள்

கல்முனைப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் வெகு விரைவில் புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றன. அரசாங்கத்தின் கூட்டுறவுச் சங்கப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கல்முனைப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறைகள் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன.

## சேமலாபநிதியில் 500,000 ஊழியர் மேலும் சேர்க்கப்படுவார்கள்

கோட்டை, திங்கள்

ஜனவரி 1ந் திகதியிலிருந்து மேலதிகமாக 5,00,000 ஊழியர்கள் சேமலாபநிதி பட்டியலில் சேர்க்கப்பட உள்ளனர்

தொழில் மந்திரி திரு எம் பி டி சற்சிறிவர்த்தன எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பலனாக மேற்படியான தொகை ஊழியர்கள் சேர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள்ளது

தற்போது 1,800,000 ஊழியர்கள் இச்சேமலாப நிதி பெறும் பட்டியலில் உள்ளனர். எந்தவொரு ஸ்தாபனத்திலும் 3 அல்லது 5 ஊழியர்களுக்கு மேற்பட்டவர்களிருந்தால் கட்டாயமாகச் சம்பள நிர்ணயசபை அந்த ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கேற்பச் சேமலாப நிதி வழங்கும்.

500,000 ஊழியர்களைச் சேமலாப நிதியின் கீழ் சேர்ப்பதானால் நாலரைக் கோடி ரூபா நன்கொடைப் பணமாகச் சேர்க்கலாமென்றும், தற்போது இப்பணம் 9 கோடி ரூபாவாக உள்ளதென்றும் தொழில் இலாகாவிலிருந்து அறியப்படுகிறது.

## இரு ஊழியர்கள் இருந்தாலும் சேமலாபநிதி!

கோட்டை, திங்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட ஊழியர்களை வைத்திருக்கும் கடைக்காரர்கள், காணிச் சொந்தக்காரர்கள் தம்மிடம் பணி புரியும் ஊழியர்கள் அனைவருக்கும் சேமலாப நிதி கட்டவேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்தகவலை தொழில் மந்திரி திரு. எம். பி. சற். சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்

இது சம்பந்தப்பட்ட தகவல்களைச் சேகரிக்கும் விண்ணப்பப்படிவங்களை தொழிற் காரியாலங்களில் பெற்றுக்கொள்ளும்படியும் அவற்றை நிரப்பி ஜனவரி மாதம் 13ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டுமெனச் சகல சொந்தக்காரர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

## வெளிநாட்டுக் கம்பெனிகளின் எண்ணெ விநியோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்ரீண்டனுக்கும் சொன்னேன்'' என உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி பருத்தித்துறை பதில் நீதிபதி திரு. கே. இரத்தினசிங்கம் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்:

இவ்வழக்கு கரவெட்டியைச் சேர்ந்த கே. வன்னியசிங்கம், எஸ். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் இவ்வருடம் ஏப்ரல் மாதம் 4-ந் திகதி அதே ஊரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராகவனை அல்லது ஆனந்தன் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது.

திரு. ஜெயக்கொடி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது: 2-வது எதிரியை சுமார் 15 வருட காலமாக எனக்குத் தெரியும் சம்பவநாள் ஞாபகமிருக்கிறது அன்று எனது கட்சி ஆதரவாளரான திரு. ஆலாலசுந்தரத்தை ஆதரித்து கிளிநொச்சி ஞெட்றிக்கோ மைதானத்தில் கூட்டமொன்று நடைபெற்றது அன்றைய தினம் ஐந்து ...க்கு இடையில் தான் இருக்கும் 2-வது எதிரி நின்ற இடத்திற்கும் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கும் ஏறக்குறைய 150 யார் தூரம் இருக்கும்.

பிறகு ஒரு நாள் 2-எதிரி கரவெட்டி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறு என அறிந்தேன் எனது தேர்தல் வேலைகளைக் கவனித்த படியால் இக் கொலை பற்றி நான் உடன் அக்கறை கொள்ளவில்லை ஒரு நாள் இக் கோட்டிற்கு வந்திருந்த சமயம் புறக்டர் பாலேந்திரன் மூலம் கொலை நடந்த நேரத்தைக் கேள்விப்பட்ட போது அந்த நேரத்தில் 2-வது எதிரியை கிளிநொச்சியில் கண்ட ஞாபகம் இருக்கிறது என பாலேந்திரனுக்கும் அன்று இக் கோட்டில் சமூகமளித்திருந்த காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்ரீண்டனுக்கும் சொன்னேன்''

மேல் விசாரணை வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில்புறக்டர் சிவா பாலேந்திரனின் உதவியுடன் அட்வக்கேட் திரு எஸ் தம்பிரத்தினம் ஆஜரானர் பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் வழக்கை நடத்தினர்.

## யப்பானிய முறையில் குடிசைக் கைத்தொழில்

யாழ்ப்பாணம், செவ். யப்பானிலுள்ள குடிசைக் கைத்தொழில்களைப் பின்பற்றி நாட்டின் சகலபாகங்களிலும் குடிசைக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய கைத்தொழிலமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

யப்பானிய முறையில் ஆரம்பிக்கப்படும் கைத்தொழில் ஒவ்வொன்றுக்கும் ரூபா 10,000-ல் இருந்து ரூபா 100,000 வரை அரசாங்கம் உதவிசெய்யத் தீர்மானித்துள்ளது. முதலீட்டைக் கணிகத்தே இக்கடன் வழங்கப்படும். இக் கைத்தொழில்கள் அநேகமாகக் கைவேலைகளாகவே அமையும். விலையுயர்ந்த பெரிய யந்திரசாதனங்களே உபயோகிக்கத் தக்கதாக அமையா.

அரசாங்கத்தின் இக்குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தித்திட்டத்தைச் செயல்படுத்த உதவுவதற்கு யப்பானிய பயிற்சியளிப்பாளர்களைக்கொண்ட குழுவொன்று விரைவில் இலங்கைவரவிருக்கிறது.

கொடிகாமம்

# பஸ் சாரதி கொலைவழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை

மட்டுவில், திங்கள் கொடிகாமம் பஸ் சாரதி கொலைவழக்கில் எதிரிகள் மூவரையும் இன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராசா விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கில், கொடிகாமம் பஸ் நிலையத்தில் இவ்வருடம் மார்ச்மாதம் 31ம் தேதி, பஸ்சாரதி சின்னப்பொடி வேலு அல்லது ஐயாவை கொலை செய்ததாக தம்பிமுத்து கணேசமூர்த்தி தம்பிமுத்து நவரத்தினம், பெருமாள் இராமலிங்கம் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் அட்வகேட் ஜே.எ.பி. செரிபிமும், 2ம்,3ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் எஸ் தம்பிரத்தினமும், புறக்டர் எஸ் பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்கள். வழக்காளி சார்பில், சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் என் கதிர்காமநாதன் வழக்கை நடத்தினர்.

துவதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். மாநிலத் தேர்தல் அதிகாரிகளைக் கலந்தாலோசிக்கவிருக்கின்...டும்: ஆகையால் மார்ச நடுப்பகுதிக்கு முன்பாக முன்பாகதேர்தலை நடத்தி முடிவுகள் அறிவித்தலவேண் ...தலையும் நடத்தி முடி...மென அவர் தெரிவித்தார். (மேலதிக விபரங்களை 3ம் பக்கம்பார்க்க)

## "தமிழ் மக்களை நாம் கைவிட மாட்டோம்"

யாழ்ப்பாணம், செவ் தமிழ்மக்களை நாம் ஒரு போதும் கைவிட மாட்டோம் இந்த நாட்டை சோஷலிச பாதையில் முன்னேற்றுவதற்கு தமிழ் மக்களின் ஒத்துழைப்பு நமக்கு தேவை:

யாழ்ப்பாணம் சுதந்திர கட்சி கிளை காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் உள்நாட்டுவெளிநாட்டுவர்த்தக அமைச்சர் திரு ரி பி இலங்கரத்தின மேற்கண்டவாறு கூறினர்.

வடபகுதி சுதந்திரக்கட்சி உபதலைவர் திரு. ஆல்பிரட் துரையப்பா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மந்திரி இலங்கரத்தின மேலும் பேசுகையில் தமிழர்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு கொடுத்து வரும் ஆதரவை நேரில் காணக் கூடியதாக இருந்தது என்று கூறினர்.

தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர் பேசும் போது வடபகுதியில் சுதந்திரக் கட்சி துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதாகவும் பல இடங்களில் புதிய கிளைகள் நிறுவுவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் இந்த அரசாங்கத்தினால் தான் பிரச்னைகளையும் தீர்க்கலாம் என வாலிபர்கள் உணர்ந்து விட்டார்கள் என்றும் கூறினர்.

## குறைநீங்கியது

அம்பன், திங்கள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள ஜீ. சீ. ஈ. பரீட்சை எடுக்கும் மாணவர்களின் பெருங்குறை இம்முறையுடன் நீங்கியுள்ளது.

இது வரைகாலமும் எந்தவொரு பொதுப்பரீட்சைக்குத் தோற்றினாலும் இப்பகுதி மாணவர்கள் பருத்தித்துறை, நெல்லியடியிலுள்ள பாடசாலைகளிலுள்ள பரீட்சை நிலையங்களுக்குச் சென்றே பரீட்சை எழுத வேண்டிய கஷ்டநிலை இருந்தது இத்தகையகஷ்டத்தை போக்க உடுத்துறை மகாவித்தியாலயத்தை பரீட்சைநிலையமாக கல்விப்பகுதியினர் தெரிவு செய்துள்ளனர். இதனால், இப்பகுதி மாணவர்களுக்கிருந்த குறை நீங்கியுள்ளது.

## 'ரத்துச்செய்க'

பருத்தித்துறை. திங்கள் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையின் மனநோய் அதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் எஸ், அருளம்பலத்தின் இடமாற்றத்தை ரத்துச்செய்யவேண்டுமென நெல்லியடிப் பட்டினசபையின் விசேட கூட்டத்தில் 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. ந. கனகசுந்தரம் கொண்டுவந்த பிரேரணை திரு. க. ஐயாத்துரையால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைவர் திரு எஸ் பி தேவசகாயம் தலைமையில் நடந்த இக்கூட்டத் தீர்மானம் சுகாதார அமைச்சருக்கும் பிரதமருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆசியநாடுகளில்

# இலங்கை ஆசிரியர்களது வேலை நேரம் மிகக்குறைவு

— துடாவை

ரெலியாவில, திங்கள் 'ஆசியாவிலுள்ள மற்றய நாடுகளில் உள்ள ஆசிரியர்களோடு ஒப்பிடுகையில் இலங்கையிலுள்ள ஆசிரியர்களது வேலை நேரம் மிகக் குறைவாகும். அவ்வாறிருந்தும் சில ஆசிரியர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட 5 மணித்தியாலங்களில் கூட சரியாக வேலை செய்வதில்லை. சோஷலிசத்தை நோக்கிச் செல்லும் எமது பிரயாணம் வெற்றியடைய வேண்டுமாளுல் ஆசிரியர்கள் தங்கள் சேவையில் கவலையீனமாக இல்லாது கவனமாகப் பணியாற்றவேண்டும்.'

கம்புறுபிட்டியா மபலன வித்தியாலயத்தில் நடைபெற்ற பிரிவுபசார விழாவொன்றில் உரையாற்றிய கல்வியமைச்சின் உதவியமைச்சர் திரு. பி. வை. துடாவை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. துடாவை மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டுள்ளதாவது:

துரதிஷ்டவசமாகச் சோஷலிசம் இதுவரை இலங்கையில் நன்ருக வேரூன்றவில்லை. ஆசிரியர்கள் தங்கள் சேவையின் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கவேண்டும்.

## பருத்தித்துறைக்கு புகழ் மாலை

பருத்தித்துறை, திங்கள் வடபகுதிலுள்ள இ. போ. ச நிர்வாகிகளில் முன்னணியில் நிற்பது பருத்தித்துறை என அண்மையில் வட பகுதிக்கு விஜயம் செய்த இ. போ. ச குழுவொன்று, தலைவர் திரு அனில் மூனசிங்காவுக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகின்றது.

நேரக் கிரமம்; ஒழுங்கான சேவை, ஊழியரின்ஒத்துழைப்பு, ஊழியரின் நேர்மை ஆகிய அடிப்படையில் பருத்தித்துறை 'டிப்போவுக்கே முதலிடம் கொடுத்துள்ளதாக அறியக்கிடக்கிறது.

......

பருத்தித்துறை, திங்கள் மஸ்கெலியா மின்சக்தி வடபகுதிக்குவந்தபின்னரும் பருத்தித்துறையில் மின்சாரக்கோளாறு தொடர்ந்து நிலவி வருகிறது. இதன் காரணம், இங்குள்ள மரக்கம்பங்களில், பல்லாண்டுகளுக்கு முன் இணைக்கப்பட்ட மின் கம்பிகளுமாயிருக்கலாமெனக் கருதப்படுகிறது. இது பற்றிப் பருத்தித்துறை நகரசபை நடவடிக்கையெடுக்க விருப்பதாக தெரிகிறது.

வெளிநாட்டுக் கம்பெனிகளின்

# எண்ணை விநியோகம் முற்ருக நிறுத்தப்படுமாம்!

கொழும்பு, திங்கள் சப்புகாஸ்கந்தை எண்ணை சுத்திகரிப்பு நிலையம் விமானத்துக்குத் தேவையான எண்ணைசுத்திகரிப்பு வேலையைஆரம்பித்ததும் மூன்று வெளிநாட்டு கம்பனிகளின் எண்ணைவிநியோகம் முற்ருக நிறுத்தப்படும்.

இவ்வாறு பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தலைவர் திரு ஈ ஆர் எஸ் ஆர் குமாரசாமி இன்று தெரிவித்தார் இது அடுத்த வருடம் மே மாதவாக்கில் நிகழும் என்றும் அவர் கூறினர்.

கப்பல் கம்பனிகளின் பிரதிநிதிகளிடம்பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறுஎடுத்துக் கூறினர்.

திரு குமாரசாமி மேலும் கூறியதாவது எண்ணைவர்த்தகம் தேசியமயமாக்கப்பட ஆரம்பித்தது 1961ம் ஆண்டில் இந்தக்காலத்திலிருந்து வருடா வருடம் இரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாவரை வெளிநாட்டு செலாவணி சேமிக்கப்பட்டுள்ளது (சி பி ஏ)

அரசாங்கத்தின் கூட்டுறவுச் சங்கப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ்கல்முனைப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறைகள் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன.

மேற்படி சங்கங்களைத் திருத்தியமைப்பது பற்றிய ஆலோசனைகளை கல்முனைப் பகுதி கூட்டுறவு அதிகாரிகள் செய்துவருகின்றனர்

அடுத்தாண்டிலிருந்து கல்முனைப் பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் கிளை ஸ்தாபனங்களாக நான்கு பெரிய கூட்டுறவுச் சங்கசமாசத்தின் கீழ் இயங்க உள்ளன.

## 'பொருளாதார வளர்ச்சிக்கு கூட்டுறவு உதவ வேண்டும்'

யாழ்ப்பாணம், செவ். கூட்டுறவுத்துறையில் யாழ்ப்பாணம், மற்ற இடங்களுக்குமுன்னேடியாகவிளங்குகிறது. இதனைக் கூட்டுறவு விசாரணைக்குழுவும் புகழ்ந்து கூறியிருக்கிறது. கூட்டுறவு வெறும் பொருள் விநியோகமல்ல: பொருளாதார வளர்ச்சிக்கும் உதவிசெய்ய வேண்டும்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கூட்டுறவு மகாநாட்டு பிற்பகல் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கிய அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது: தற்போதுள்ள கூட்டுறவு முகாமையாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் கூட்டுறவுக் கல்வி போதியளவு இல்லை. இதனால் சங்கத்தை வெற்றிகரமாக நடத்தமுடியாமலிருந்தது இத்தக்குறை மறுசீரமைப்பில் நீக்கப்படும்.

சோஷலிச அடிப்படையில் நாடு முன்னேறவேண்டுமென்ருல் அதற்கு கூட்டுறவு தான் தகுந்த அடிப்படையாகும்.

## தபால்பெட்டி

அம்பன், திங்கள் வடமராட்சி கிழக்கில் தற்சமயம் சேவையிலீடுபட்டிருக்கும் மெயில்பஸ்ஸில் தபால் பெட்டி இல்லாததால் இப்பகுதி மக்கள் பஸ்ஸில் தபால் போடுவதற்கு காத்து நின்று ஏமாறுகின்றனர்.

எனவே இப்பகுதி மெயில் பஸ்ஸில் தபால் பெட்டி வைத்து இப்பகுதி மக்களின் குறையை நிவர்த்தி செய்யுமாறு கேட்கும் மகஜரை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அதிகாரிகட்கு கிழக்கரை அபிவிருத்திமுன்னணி அனுப்பிவைத்துள்ளது.

## லொறிவிபத்து

யாழ்ப்பாணம், செவ்வாய் கைதடியில் நேற்று நடந்த லொறி-சைக்கிள் விபத்தில் வாலிபர் ஒருவரின் கால் துண்டிக்கப்பட்டது. கதிரவேல் மார்க்கண்டு என்ற அந்த வாலிபர் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பிலிருந்துசாமான் ஏற்றி வந்தலொறி கைதடிப் பகுதியில் வீதியை விட்டு விலகி சைக்கிளில் வந்த வாலிபரை மோதியதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

லொறிச்சாரதி சாவகச்சேரிப் பொலிசில் வாக்குமூலமளித்துள்ளார்.

(கு வி. ம,)

தாயும், சிசுவும் மரணம் சம்பந்தமாக

# ரிமாண்டிலிருந்த டாக்டர் பிணையில் செல்ல அனுமதி

மட்டுவில், திங்கள் 18வயது இளம தாயும், சிசுவும் மரணமடைந்ததைத் தொடர்ந்து சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த டாக்டர் 2000ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சாவகச்சேரிமாஜிஸ்திரேட் திரு. டயஸ் முன்னிலையில் நேற்று சந்தேக நபரான டாக்டர் ஆஜர் செய்யப்பட்டார். சந்தேக நபர் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே.எம். பி. செரிபிம் சந்தேகநபரை பிணையில் விடுமாறு கோரினர்.

சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதித்த மாஜிஸ்திரேட்அடுத்த தவணைவரை ஏதாவது அசம்பாவிதமாக நடந்து கொண்டால் பிணை ரத்துச் செய்யப்பட்டு, ரிமாண்டில் வைக்கப்படுவீர் எனக் கூறினர்

முல்லைத்தீவைச் சேர்ந்த இளம் பெண்ணுக்கு பலாத்கார கருச்சிதைவு செய்ததாக சந்தேகத்தின் பேரில் டாக்டர் கைது செய்யப்பட்டார். தாயும் சிசுவும் மரணமானதை தொடர்ந்து புதைகுழியில் சிசுவின் சடலத்தை பொலிசார் கண்டு பிடித்தனர்.

மாஜிஸ்திரேட், சந்தேக நபரை ஜனவரி 18ம் திகதி மீண்டும் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உஷா தையல் மெசின் (Stream lined) புதியது விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். மனேச்சர், பெருமாள் கோயில், யாழ்ப்பாணம். 2600

நல்ல நிலைமையிலுள்ள சிங்கர் கைமெஷின் (SILENT MODEL) விற்பனைக்குண்டு. S.G. அரியரத்தினம், பாதிரி கோவிலடி, கொக்குவில். 2609


## விளையாட்டுப் போட்டிபற்றி பொலிஸ் அதிகாரி

மாவிட்டபுரம், திங்கள்

விளையாட்டுப் போட்டிகளில் குறுகிய போட்டிமனப்பான்மை நிலவக் கூடாது இஃனல் தன்மை எதுவும் விளையாது. இதற்கு மாறாக சமூகத்தில்சீர்கேடு வளரவே வழியுண்டாகும். நல்ல நோக்கை முன்வைத்து பரந்துபட்டரீதியில் விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டும்.

இவ்வாறுகட்டுவன் உடல்கலை வளர்ச்சிக்கழக ஆதரவில் நடந்த பொன்னம்பலம் ஞாபகார்த்த 4-வது உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். எஸ். நவரத்தினராசா கூறினர்.

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக அதிபர் திரு. கே. சிவபாலன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 29—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ:

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4 25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 இளைஞர்கண்டு பிடிப்புகள்.

இரவு 6-10 பாமாலை, 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 சிறுகதை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா—அசோகன் நடித்த

**மாட்டுக்கார வேலன்**

ராஜா - யாழ். நகர்

தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30

**ஏசுநாதர்**-தமிழ்

இப்படத்துடன்

**அறிஞர் அண்ணவின் இறுதியாத்திரை**

எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்


## சாண்டோஸ் வெற்றி

சாய்ந்தமருது, திங்கள்

சாய்ந்தமருது, கல்முனை உவஸ்லி உயர்தரப்பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கல்முனை சாண்டோஸ் உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் தென்கிழக்குப் பொலிஸ் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டி சிநேகபூர்வமாக மோதிக்கொண்டதில் 7-0 கோல்களால் கல்முனை சாண்டோஸ் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு எம். திலகரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 14-ம் திகதி [29-12-70]

மேஷம்- புதிய பாதையில் நடைபோடுவீர்கள். புத்திர வழியால் புகழுக்கு இடமுண்டு. பொருள் வரவுக்கு நல்ல தினம்.

ரிஷபம்- மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கம் காட்டுவீர்கள். தாராள குணத்தின் மூலம் தனமும் செலவாகும். புண்ணிய யாத்திரையுண்டு.

மிதுனம்- பிரமச்சாரிகளின் வாழ்வில் காதல் அரும்பும். வாழ்க்கையில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும் கண்ணியமான தினம்,

கடகம்- அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவுண்டு வீண் செலவு வேண்டாம் விபரீதம் விளைந்திடும்

சிம்மம்- மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. தெய்வ நம்பிக்கையில் ஆர்வம் பிறக்கும். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்

கன்னி- இதயத்தில் தென்றல் வீசும். பிறந்தகத்தின் தொடர்புகள் வளரும் மூத்தோரின் உதவியுடன் முன்னேற்றத்திற்கும் இடமேற்படும்.

துலாம்- பூமியால் லாபமுண்டு. புத்திரர் புகழும் சேரும் பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும்.

விருச்சிகம்- பொருள் முடைதென்படும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாது தவிப்பீர்கள்

தனுசு- தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும். கடமையாற்றுமிடத்தில் நிதானம்

# பெண்களுக்கு உதைபந்தாட்டப் பயிற்சி

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கையில் முதல் தடவையாகப் பெண்களுக்கு உதைபந்தாட்டப் பயிற்சி அளிக்கப்படுகிறது. விளையாட்டு வீரர் திரு. ஏ. எஸ். கனகரத்தினம் அனுராதபுரத்தில் இப்பயிர்சியை அளித்து வருகிறார். நாடு பூராவும் இப்பயிற்சி வகுப்புகளை அமைப்பது சம்பந்தமாக விளையாட்டு அமைச்சருடன் இப் பயிற்சியாளர் தொடர்பு கொண்டுள்ளார்.

ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பெண்கள் உதைபந்தாட்ட விளையாட்டுக்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள் என்றும் உதைபந்தாட்ட விளையாட்டினுல் நம் நாட்டுப் பெண்கள் திடகாத்திரமாகவும் மன உறுதியுடனும் வாழ முடியுமென்றும் இப்பயிற்சியாளர் தெரிவித்தார்.

உதை பந்தாட்டம்

# இரு போட்டிகளில் சிறுவிளான் வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

வசாவிளான் விளையாட்டுக் கழகத்தை சிறுவிளான் டயமன்ட் விளையாட்டுக் கழகம் வென்றது

கட்டுவன் பாலர் ஞானோதய விளையாட்டுக்கழக ஆதரவில் நேற்று முன்தினம் ஆரம்பமான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் இரு கழகங்களும் மோதிக் கொண்டன.

முதலில் இரு தரப்பு வீரர்களும் விட்டுக் கொடுக்காது திறமையாக ஆடியதால் கோல் எதுவும் போடமுடியாது போய்விட்டது. இடைவேளையின்பின் சிறுவிளான் வீரர்களிடையே புதிய உத்வேகம் ஏற்பட்டது. சிறுவிளான் வீரரான மணி என்பவர் ஒரு கோலைச் சாதுரியமாகப் போட்டார், இறுதியில் சிறுவிளான் 1—0 கோலால் வென்றது.

சிறுவிளான் டயமன்ட் விளையாட்டுக் கழகமும் மாசியப்பிட்டி விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியொன்றிலும் சிறுவிளானே வெற்றியடைந்தது.

போட்டி முடிய 5 நிமிடம் இருக்கும்போது சிறுவிளான் கோஷ்டி வீரர் சிறீதரன் ஒரு கோலை விளாசியதால் சிறுவிளான் 1—0 கோலால் வெற்றி பெற்றது. போட்டிக்கு திரு. எஸ். விநாயகமூர்த்தி மத்தியஸ்தம் வகித்தார்.

இச்சுற்றுப் போட்டியின் 1-ம் பிரிவுப் போட்டியைச் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. [illegible] தடுத்து விளாசினர்கள். இறுதியில் குப்பிளான் 3—0 கோல்களால் வென்றது. திரு. எஸ். நடராசா இப் போட்டிக்கு நடுவராக இருந்தார்.

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

கொக்குவில்இளைஞர்மன்ற ஆண்டுவிழாவிற்கு பிரதம விருந்தினராக செனட்டர் திரு ஏ பி ஜெயசூரியாவை அழைப்பதெனவும், மன்ற ஆண்டுவிழாவை ஜனவரி 25-ல் நடத்துவதெனவும், மன்றக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பின்வருவோர் மன்ற நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: த. சகாதேவன், உபதலைவர்: க. சம்பத்குமார். காரியதரிசி: க. கருணாகரன், உபகாரிதரிசி, எஸ். கோடீஸ்வரன் தனாதிகாரி: எஸ். பவானந்தன், உபதனாதிகாரி எம். எஸ். இராகுவன்.

10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## இடமாற்றம்

கொடிகாமம், திங்கள்

மன்னார் தபால்கந்தோரில் உப-தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு கே கனகசிங்கம் அடுத்தமாதம் கொடிகாமம் முல்லைத்தீவு தபால் கந்தோருக்கு உப-தபால்அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

நாவற்குழி, திங்கள்

கைதடி-நாவற்குழி [illegible]

# ஓய்வுபெறும் ஆசிரியர்கள்

### வே. சரவணமுத்து

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன்மிஷன் பாடசாலையின் தலைமையாசிரியராகப் பணிபுரிந்த திரு வே சரவணமுத்து இருபத்தெட்டு வருட ஆசிரிய சேவைக்குப் பின் ஐம்பத்தைந்தாவது வயதில் இளைப்பாறியுள்ளார்.

பண்ணாகத்தை வசிப்பிடமாகக்கொண்ட இவர் ஆரம்பத்தில் தொல்புரம் விக்கினேஸ்வராவிலும் பின் மாதகல் விக்கினேஸ்வராவிலும் கடைசியாக சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் சேவை புரிந்துள்ளார்.

இவர் அகிலஇலங்கைத்தமிழாசிரியர் சங்கம், வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகியாகவும், வலிமேற்கு த ஆ சங்கத்தின் தனாதிகாரியாகவும், செயலாளராகவும் கடமை செய்துள்ளார்.

0 0 0

### க. முருகேசு

யாழ்ப்பாணம், செவ்.

அல்வாய் வடக்கு வீரபத்திரர் கோவிலடியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் ஈழத்தின் பலபாகங்களிலும் சேவையாற்றிக் கடைசியாக அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறுபவருமான திரு. க. முருகேசு கடந்த 32 வருடங்கள் ஆசிரியப் பணியாற்றியுள்ளார். தமிழ் இலக்கண, இலக்கியங்களில் மிகவல்ல இவர் கவிபடைக்கும் ஆற்றல் பெற்றவர், சமூக சேவையிலே மிகவும் ஈடுபாடுகொண்டவர்.

அண்மையில் நடைபெற்ற பிரிவுபசாரவிழாவிலே ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர், பழையமாணவர், அறிஞர்கள் ஆகிய பலராலும் பாராட்டப்பட்டு, அவர் இல்லம்வரை அழைத்துச் செல்லப்பட்டார்' பல அன்பளிப்புகள் பொதுமக்களால் வழங்கப்பட்டன.

0 0 0

### ம. வல்லிபுரம்

அம்பன், திங்கள்

செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றிய திரு. க. வல்லிபுரம் இளைப்பாறுவதை முன்னிட்டு அப்பகுதி மக்களாலும், பாடசாலை மாணவர்களாலும் பிரிவுபசார விருந்தொன்று நடாத்தப்பட்டு பாடசாலை மாணவிகளும் அவருக்குப பிரிவுபசாரவிழா நடத்திக் கௌரவித்தனர்.

சென், ஜேம்ஸ்பங்கில் இவரதுசேவைகளைப் பாராட்டி கட்டளைக் குரவர் வண. டெங்சி தலைமையில் இவ் விழா நடைபெற்றது. செல்வி மரியநாயகிநேசம் பிரிவுபசாரப்பத்திரம் வாசித்தளித்தார். திரு எஸ் டேவிட் நன்றி தெரிவித்துப் பேசினர்.

## ஓய்வு பெறுகிறார்

கொடிகாமம், திங்கள்

கச்சாய் கிராமசபையில் வரி விதிப்பாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். சூசைப்பிள்ளை இம்மாத முடிவில் தமது பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

## 'கஜமுகாசூரன் போர்'

தாவடி, திங்கள்

தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலத்தில் அடுத்த மாதம் 1-ம் திகதி கஜமுகாசூரன் போர் விழா நடைபெறவுள்ளது.

# செய்திச் சுருக்கம்

### வெள்ளைத் துணிக்கு தட்டுப்பாடு

இரத்தினபுரி, கெலிய கொடை, பறக்கடுவ, குருவிற்ற பகுதிகளில் வெள்ளைப் பப்ளின் துணிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பகுதிகளில் கூடுதல் விலைக்கு இத் துணியை விற்பதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது.

### உணவு உற்பத்தி வேலையில் சிறைக் கைதிகள்

மறியலில் இருக்கும் கைதிகளை நாட்டில் அரசாங்கம் மேற்கொள்ள விடுக்கும் உணவு உற்பத்தி வேலைகளில் ஈடுபடுத்த வேண்டும் என அட்டலகொரளை தெபத்து கிராமசபை ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

### ஜனவரி 1ல் வேலைகள் ஆரம்பம்

அடுத்தாண்டு ஜனவரி முதலாம் திகதி அரசாங்க வர்த்தக கூட்டுஸ்தாபனம் தனது வேலைகளை ஆரம்பிக்க விருக்கிறது. கொழும்பு யூனியன் பிளேசில் 440ம் இலக்கக் கட்டிடத்தில் இக் கூட்டுஸ்தாபனக் காரியாலயம் அமைக்கப் பட்டுள்ளது.

### மக்கள்வங்கி கிளை

வாழைச்சேனையில் மக்கள் வங்கிக் கிளையொன்றை நிறுவுவதற்கான சகல வேலைகளும் பூர்த்தியாகி விட்டன. ஆதலால் இப் பகுதியில் மக்கள் வங்கி கிளை விரைவில் திறக்கப்படவிருக்கிறது. அடுத்தாண்டு ஜனவரியில் இக்கிளை திறந்து வைக்கப்படும்.

பாலிஸ்காவலுக்கு [illegible] புறக்கணிக்கப் பட்டுள்ளன. இப் பஸ்களின் பெயர்ப் பலகைகளில் சிங்களத்தில் மட்டுமே அவை செல்லும் இடங்களின் பெயர்கள் எழுதப் பட்டுள்ளதால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள். பஸ்கள் எங்கு செல்லுகின்றன என இப் பகுதி தமிழ் மக்கள் விசாரித்தே அறியவேண்டியிருக்கிறது.

### உதவிப்பணம் வேண்டும்

நாட்டில் உள்ள விவசாய சபைகளுக்கு அரசாங்கம் கிராம சபைகளுக்கு வழங்குவது போல் உதவிப்பணம் வழங்க வேண்டும்'.

மேற்கண்டவாறு இரத்தினபுரி வட்டாரவிவசாய சபை மக்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

## நினைவு அஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

அமரர் வட்டக்கச்சி டாக்டர் எஸ். வி. மூர்த்தியின் நினைவஞ்சலிக் கூட்டமொன்று நாளை கரைச்சி விதானையார் முன்றலில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் திரு. வீ. ஆனந்தசங்கரி, திரு. சி. அருளம்பலம் ஆகியோரும் திரு. இ கிருஷ்ணராசா, திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி, டாக்டர். வீ. மாசிலாமணி ஆகியோரும் உரையாற்றுவார்கள்.

## நோயாளிகள் அவதி

சாய்ந்தமருது, திங்கள்

பொத்துவில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை

எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்

அத்துடன்

பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில் 40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.

யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்

ராஜன், லட்சுமி, நிர்மலா, ரவிச்சந்திரன் நடித்த

# ஏன்?

அத்துடன்

## பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரின் இலங்கை விஜயம்

30 நிமிடங்களுக்கு தமிழில் எல்லாக் காட்சிகளிலும் காண்பிக்கப்படுகின்றது.

கெப்பிட்டல் பிளாஸா

(கடைசி 2 தினங்கள்) திரைகளிலும்

## யாழ். வெலிங்டன்

திரையிலும்

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30

இரவு 9-30, போயா நாட்கள்

காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி

மக்கள் திலகம்

எம். ஜி. ஆர்.

ஜெயலலிதா

வாணிஸ்ரீ





முத்துராமன், அசோகன், சோ,

ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த

சத்யா மூவிஸ்

# கண்ணன் என் காதலன்

அத்துடன்

வெலிங்டனில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில் காண்பிக்கப்படும்


...த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாது தவிப்பீர்கள்

தனுசு- தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும். கடமையாற்றுமிடத்தில் நிதானம் வேண்டும்.

மகரம்- புதுவழிகள் மூலம் பணம் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு எதிலும் வெற்றியுண்டு.

கும்பம்- தொடங்கிய விடயம் பாதியில் தடைப்படும் இதனால் பொருள் விரயத்திற்கு இடமேற்படும்

மீனம் அந்தஸ்தில் உயர்வு தென்படும், எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னேடி நடவடிக்கை எடுக்கப்படும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## நடைபஜனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்பண்ணை றோட்டில் அமைந்திருக்கும் கொட்டடி முத்தமிழ் மன்றத்தினர் எதிர்வரும் திருவெம்பாவை தினங்களில் நடைபஜனை செய்யத் தீர்மானித்துள்ளனர்.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த

## நம் நாடு

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

கே. பி. சுந்தராம்பாள் நடித்த

## ஒளவையார்

REGAL

Jaffna

Daily 4-45, 7, 9-45 p. m.

Poya days 4 shows

Frank Sinitra

in

THE DETECTIVE

MANOHARA

Jaffna

Daily

4-30, 7-15 & 9-45 p.m.

Public holidays 10-30 a.m.

Clint Eastwood

Lee Marvin

in

PAINT YOUR WAGON

(Scope-Color)


...கு திரு. எஸ். விநாயகமூர்த்தி மத்தியஸ்தம் வகித்தார்.

இச்சுற்றுப் போட்டியின் 1-ம் பிரிவுப் போட்டியைச் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ். நவரத்தினராசாவும் 2ம் பிரிவுப் போட்டியைப் பலாலி சேர். பொன் இராமநாதன் கனிஷ்ட பல்கலைக் கழக அதிபர் திரு. கே. சிவபாலனும் ஆரம்பித்து வைத்தனர்.

## பலாலி குப்பிளான் வெற்றி

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசர் விளையாட்டுக் கழகமும் பலாலி உதயகலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதிய உதைபந்தாட்டப் போட்டியில் பலாலி வெற்றி பெற்றது

குரும்பசிட்டி உதயதாரகை மன்ற ஆதரவில் தற்போது நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஒரு அங்கமான இப் போட்டியில் மேற்படி இரு கோஷ்டிகளும் மோதிக் கொண்டன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மைதானத்தில் நடந்த இப் போட்டியில் இருதரப்பினரும் விட்டுக் கொடுக்காமல் ஆடியபோதும் பலாலி கோஷ்டி ஒரு கோலை லாவகமாகப்போட்டு வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. எஸ். விநாயகரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

1-ம் பிரிவுப் போட்டியொன்றில் மாவிட்டபுரம் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதியபோது இடைவேளையின்முன் இரு தரப்பினரும் சிறப்பாக ஆடியதால் ஒருவராலும் கோல்போட முடியாது போய்விட்டது. இடைவேளையின்பின் குப்பிளான் வீரர்கள் 3 கோல்களை அடுத்...

## முதற்பரிசு நாடகம்

பண்டத்தரிப்பு, திங்கள்

வடபகுதியில் முதலிடம் பெற்ற இளவாலை கன்னியர்மட ஐக்கிய பண்டகசாலை மாணவிகளால் நடிக்கப் பெற்ற 'என் தலையில்' என்ற நாடகத்திற்கான பரிசுக்கான வெற்றிக் கேடயத்தையும் சான்றிதழையும் வடபகுதி ஐக்கியமேற்பார்வைச் சபையின் 33-ம் வருடாந்தக் கூட்டுறவு மாநாட்டின் போது அமைச்சர் திரு. ரி. பி. லங்கரெத்தினவின் பாரியார் வழங்கினர்.

...க்கம் முல்லைத்தீவு தபால் கந்தோருக்கு உப-தபால்அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

நாவற்குளி, திங்கள்

கைதடி-நாவற்குளிப்பகுதியில் மலேரியா தடுப்புப்பகுதியின் இரத்தப்பரிசோதகராகக் கடமையாற்றிய திரு ஏ. இராஜலிங்கம் அடுத்த மாத முற்பகுதியில் உரும்பராய்ப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

நாவற்குளிப் பகுதியில் கிராமசேவகராகக் கடமையாற்றிய திரு. வ. கதிர்காமநாதன் அடுத்தமாத முற்பகுதியில் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த நுணாவிலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

தாவடி, திங்கள்

உடுவில் கிராமசபையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. என். ஈ. பேராயிரம் பனுக்கட்டியாவா கிராம சபைக்கு மாற்றலாகிச் செல்கின்றார்.

## கந்தசாமி ஞாபகார்த்தப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, திங்கள்

வதிரித்தமிழ் மன்றத்தின் ஆதரவிலான கந்தசாமி ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின்சில முடிவுகள் வருமாறு:-

நெடியகாடு இளைஞர்விளையாட்டுக்கழகத்திற்கும், கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்றபோட்டியில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் 2—0 கோல்களால் வெற்றிபெற்றது.

கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் புத்தூர் வீனஸ் கழகத்திற்குமிடையியே ஏற்பட்ட உதைபந்தாட்ட மோதலில் கரவெட்டிக் கோஷ்டி புத்தூரை 6—0 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டிக்குத் திரு. க. இரத்தினசிங்கம் மத்தியஸ்தராகப் பணிபுரிந்தார்.

வல்வெட்டித்துறை உதைபந்தாட்டக்கழக ஏ- பிரிவுக் கோஷ்டிக்கும், வதிரி டயமண்ட்ஸ் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சிநேகிதபூர்வமானபோட்டியில் இரு கோஷ்டிகளும் தலா இரு கோல்களைப் போட்டுக் கொண்டதால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. திரு இரா. ஸ்ரீகாந்தன் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகப் பணி புரிந்தார்.

...தமிழ்க்கலவன் பாடசாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றிய திரு. க. வல்லிபுரம் இளைப்பாறுவதை முன்னிட்டு அப்பகுதி மக்களாலும், பாடசாலை மாணவர்களாலும் பிரிவுபசார விருந்தொன்று நடாத்தப்பட்டது.

0 0 0

### சங். சகோதரி சென் போல்

பண்டத்தரிப்பு, திங்.

இளவாலை மகாவித்தியாலய ஆசிரியை சங். சகோ. சென்போல் கரமபனுக்கு இடமாற்றம் பெற்றதை யிட்டு மேற்படி பாடசாலை ஆசிரியைகளும் விடுதிச்...

## காரைநகர் வடக்கு கி. சபைஉறுப்பினர்கள்

சுழிபுரம், திங்கள்

புதிதாகப் பிரிக்கப்பட்ட காரைநகர் வடக்கு இராம சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்: க கந்தையா, 2-ம் வட்டாரம்: ஆ பழனிவேல் (போட்டியில்லை), 3-ம் வட்டாரம்: கே கதிரமலை, 4-ம் வட்டாரம்: சு இராசசேகரம், 5-ம் வட்டாரம்: ஜே முருகேசு, 6-ம் வட்டாரம்: ஐ கந்தசாமி, 7-ம் வட்டாரம்: சா சோமசுந்தரம் (போட்டியில்லை), 8-ம் வட்டாரம்; செ வேலுப்பிள்ளை (போட்டியில்லை), 9-ம் வட்டாரம் க தில்லைநடராசா, 10-ம் வட்டாரம்: ச சுந்தரம்பிள்ளை, 11-ம்வட்டாரம்: மு அம்பலவாணர் (போட்டியில்லை), 12-ம் வட்டாரம்; ஆ கனகசபை.

## காரை அபிவிருத்திச் சபை நிர்வாகிகள்

கொழும்பு, திங்கள்

கொழும்பு - காரை அபிவிருத்திச்சபை 27-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதுவருட உத்தியோகத்தர் விபரம் வருமாறு:

போஷகர்வழக்கறிஞர் திரு ச. க. பொன்னம்பலம்: டாக்டர் கு. தண்டாயுதபாணி, திரு. அ. ச. ஆறுமுகம் தலைவர்: திரு. வே. சிவகுரு, உபதலைவர்கள் திருவாளர்கள் அ. ச. ச. இராசரத்தினம், ந. க. பி. விஜயசிங்கம், பொதுச் செயலாளர் திரு. நா. பொன்னையா உதவிச் செயலாளர்கள் திருவாளர்கள் ஐ. தி. சம்பந்தன், பொ. வன்னியசிங்கம், பொருளாளர் திரு. வி. தர்மலிங்கம் உபபொருளாளர் திரு. ச. நல்லதம்பி மேலும் 11 பேர் ஆட்சிக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

...விட்டன. ஆதலால் இப்பகுதியில் மக்கள் வங்கி கிளை விரைவில் திறக்கப்படவிருக்கிறது. அடுத்தாண்டு ஜனவரியில் இக்கிளை திறந்து வைக்கப்படும்.

### பாகிஸ்தானுக்கு அன்பளிப்பு

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் ஆட்சிமன்றச் செயலாளர் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி அன்மையில் பெரு வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்கு இலங்கையின் சார்பில் நேற்று 10 லட்சம் ரூபா பெறுமதியான தேயிலையும் ஜவுளி வகைகளும் அன்பளிப்பாக வழங்கினர். நேற்று பகல் 11மணிக்கு இவ் அன்பளிப்பு பாகிஸ்தான் தூதரிடம் கையளிக்கப்பட்டது.

### நூல் மோசடி

சிறு கைத்தொழில் இலாகா, தேசிய ஜவுளி கூட்டுஸ்தாபனம் ஆகியவற்றால் நெசவாளருக்கு இறக்குமதி செய்யப்படும் நூல்களை கைத்தறி, மின்தறி நெசவாளர்கள் தமது தேவைக்கு என வாங்கி பயன் படுத்தாமல் கடைக்காரர்களுக்கு லாபத்துக்கு விற்கிறார்களாம். கடைக்காரர்கள் இந்த நூலைப் பெற்று மேலும் அதிகலாபம் பெறுகிறார்கள். இந்த நடவடிக்கைகளை சில தினங்களுக்கு முன் திடீர் பரிசோதனைக் குழுவினர் பல கடைகளைச் சோதனையிட்டு கண்டுபிடித்துள்ளனர். 1,50,000 ரூபா பெறுமதியான 20,000 றாத்தல் நூல் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் புறக்கணிப்பு

சிலாபத்திலுள்ள இ.போ. ச. பஸ் டிப்போவின் பஸ்களில் தமிழ் எழுத்துக்கள்...

...யாற்றுவார்கள்.

## நோயாளிகள் அவதி

சாய்ந்தமருது, திங்கள்

பொத்துவில், நிந்தாவூர், கல்முனை ஆகிய மூன்று தொகுதிகளிலுமிருந்து பெருந்தொகையானநோயாளர்கள் சிகிச்சை பெறும் கல்முனை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் போதிய மருந்து இல்லாது நோயாளிகள் பெரும் கஷ்டத்திற்கும் நஷ்டத்துக்கும் குமுள்ளாகின்றனர்.

இங்குவரும் வெளிநோயாளர்கள் போதிய மருந்துகள் இல்லாததினால் வெளியில் பணம்கொடுத்து வாங்க வேண்டியநிலையில் உள்ளனர். இதே போன்று இங்கு வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களும் பெரும் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகியுள்ளனர்.

முக்கியமான ஊசி மருந்துகள் கிடைப்பதில்லையாம். இம்மருந்தை வெளியிலிருந்துதான் பணம் கொடுத்துப் பெறவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இந்த அவல நிலையை உடன் நீக்க இந்த மக்கள் அரசாங்கம் முன்வரவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

## சீர்கேடு

அம்பன், திங்கள்

தொண்டமனாறு ஆழியவளை பஸ்சேவை தொடர்ந்து நடைபெறுமலிருப்பதால் இப்பகுதி மக்கள் பிரயாணம் செய்ய இயலாமல் கஷ்டமடைகின்றனர்.


## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

# புத்தாண்டை

பொலிவுடன் கொண்டாட

உங்கள் குழந்தைச் செல்வங்களுக்குகந்த

- நைலோன் சிவ்ற் (Shift)
- பேபி சூட்ஸ்
- சன் சூட்ஸ்
- நைலோன் கவுண் வகைகள்

எண்ணற்ற கலர்களிலும், எல்லா அளவுகளிலும் குறைந்த விலைகளிலும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

# டயரும்ஸ்

54 - 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “மக்களிடமே அதிகாரமிருப்பதால் அவர்களின் கட்டளையைக் கோருகிறேம்”

## இடைக்காலத் தேர்தல் பற்றி இந்திரா விளக்கம்

புதுடில்லி, டிசம்பர்.28

**‘ஜனநாயகத்தில் மக்களிடமே அதிகாரம் இருக்கிறது. அதனால் தான் இன்னும் 14 மாதங்களுக்கு அரசாங்கத்தை நடத்த வாய்ப்பிருந்தும், மக்களிடம் புதிய கட்டளையைப் பெறுவதற்காக அரசாங்கத்தைக் கலைத்து இடைத் தேர்தல் நடத்துமாறு ஜனதிபதிக்கு ஆலோசனை கூறினேன்.**

**மக்களின் வாழ்வை மேம்படுத்தவும் அதற்கேற்ப நாட்டை சீர்திருத்தவும் அரசாங்கம் தலைப்பட்ட பொழுதெல்லாம் பிற்போக்கு வாதிகள் தன்னலத்திற்காக எப்பொழுதும் முட்டுக்கட்டை போடத் தவறவே இல்லை’**



இவ்வாறு இந்திய லோகசபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் விடுத்த செய்தியில் பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்தார்.

சோஷலிசம் மதசார்பற்ற கொள்கை ஆகிய அரசாங்கத்தின் கொள்கைக்கு இந்திய மக்களிடமிருந்து புதிய கட்டளையைப் பெறுவதற்கு நான் விரும்புகின்றேன் அதனால்தான் மந்திரி சபையைக் கூட்டி அதன் ஆலோசனையைப் பெற்ற பின் அதன் முடிவை ஜனதிபதி திரு வி. வி. கிரியிடம் தெரிவித்தேன், என்று பிர

இவரது ஆலோசனையை மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்தபின்பே லோகசபையைக் கலைக்கும் உத்தரவை ஜனதிபதி பிறப்பித்தார் என்று ராஜ்ய பவனிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்திரா காந்தி நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

‘காங்கிரஸ் இரண்டாகப் பிளவுற்ற பின்பு ஆளும் கட்சியின் பெரும்பான்மை பலம் குறைந்த போதிலும் ஆட்சிமன்றத்தின் நம்பிக்கையை அது இழந்துவிடவில்லை. இந்த அரசாங்கம் தனது பதவிக் காலம் முடியும்வரை ஆட்சி புரிய முடியும், இருந்த பொழுதிலும் இடைத் தேர்தல் ஒன்றை நடத்தி சோஷலிசத்திற்கும் மதச் சார்பற்ற கொள்கைக்கும் மக்களிடமிருந்து புதிய கட்டளையை பெறவே விரும்புகிறேன். தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் அக்கறையல்ல. மக்களின் மேலான வாழ்வும், சுதந்திர சுபீட்சமும் அரசின் அக்கறையாகும். ஜனநாயக அமைப்பில் அதிகாரம் மக்களிடமே இருக்கி



கள் தன்னல நோக்கிற்காக தடைபோட்டே வந்திருக்கின்றன. இதற்காக மொழி வெறி, இனவெறியை அவர்கள் கிளப்பி விடுகின்றனர். இவர்கள் இவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்க தீவிரவாதிகள் இன்னொரு புறத்தில் வன்முறைச் செயல்களைச் செய்து கொண்டும் தூண்டிக் கொண்டும் இருக்கிறார்கள். நாட்டில் பிற்போக்கு வாதிகளின் மறைமுகத் தூண்டுதல்களினால் மாணவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர். ஏழை மக்களினதும் நாட்டின் நலன்கருதியும் அரசாங்கத்தினால் கொ

## கலைக்கப்பட்ட லோகசபையில் கட்சிகளின் நிலை

இந்திய லோகசபையின் நான்காவது ஆட்சிக்காலம், நேற்றோடு முடிவுற்றது. இந்த லோகசபை மூன்று வருடம் 285 நாட்கள் ஆட்சியில் இருந்தது. இம்மாதம் 18-ம் திகதி நடந்த கூட்டத்தின்தின்பின் லோகசபை ஒத்திவைக்கப்பட்டது. இந்த லோகசபையில் சபாநாயகர் நீங்கலாக 552 அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள்.

ஜகஜீவன்ராம் காங்கிரஸ் 228, சிண்டிக்கேட் காங்கிரஸ் 65, சுதந்திரா 35, ஜனசங் 33, தி.மு.க 24. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 24, கம்யூனிஸ் (மார்க்சிஸ்ட்) 19, சம்யுக்த சோஷலிஸ்ட் 17, பிரஜா சோஷலிஸ்ட் 17, பாரதிய கிராந்திடல் 10, எதிலும் சேராதவர்கள் 25, சுயேச்சைகள் 24, காலி இடங்கள் 3.

இந்திய-பாகிஸ்தான்

## அடிப்படைப் பிரச்னைகள் தீர்ந்தாலே பிற பிரச்னைகள் தீரும்

பூட்டோ

கராச்சி, டிச 28

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்க்கும் வரை இந்தியாவுடன் ஒற்றுமைக்கென்றபேச்சுக்கே இடமில்லையென்று பாகிஸ்தான் முன்னாள் பாதுகாப்பமைச்சரும்மக்கள் ஜனநாயகக்கட்சியின் தலைவருமான திரு. அலிபூட்டோ பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நீண்டநாளாக இருந்துவரும் அடிப்படைப்பிரச்னைகளில் தீர்வு கண்டால்தான் பிறபிரச்னைகளில் ஒருதீர்வுகாண முடியும் என்றார்.

பாகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மேற்குப் பாகிஸ்தானில் அதிகப் பெரும்பான்மையைப்பெற்றது மக்கள் ஜனநாயகக் கட்சி இக்கட்சியின்தலைவரே திரு அலி பூட்டோ.

இதே வேளையில் கிழக்குப் பாகிஸ்தானில் பெரும்பான்மையி[illegible]களைப் பெற்ற அவாமி[illegible] தலைவர் ஷேக்

பகுதியினருக்கும் திருப்தி அளிக்கும்வகையில் வர்த்தக உறவை ஏற்படுத்திக் கொள்வதில் கவனஞ் செலுத்த வேண்டுமென அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

## சிங்கப்பூரின் புதிய ஜனதிபதி

சிங்கப்பூர், டிசம்பர் 28

சிங்கப்பூரின் புதியஜனதிபதியாக டாக்டர் பெஞ்சமின் ஷியார்ஸ் தெரிவு செய்யப்படலாமெனத் தெரிகிறது இவ்வார இறுதியில் சிங்கப்பூர் ஆட்சிமன்றத்தில் இவரது பெயர்பிரேரிக்கப்படலாம். இவர் தலைசிறந்த மகப்பேற்று வைத்திய நிபுணராகும்.

1907-ம் ஆண்டு ஆகஸ்ட் 12-ல் டாக்டர் ஷியார்ஸ சிங்கப்பூரில் பிறந்தார் 1929-ம் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்று அரசாங்க உதவி மருத்துவ அதிகாரியானார். இதன்பின் மகப்பேற்று வைத்தியத்தில்சிறப்புப்படிப்பை மேற்கொண்[illegible] ஜப்பான் சிங்கப்பூரை ஆக்கிரமித்தபொழுது இவர் சிங்கப்பூரில் வாழ்ந்[illegible]

மேற்காசிய சமாதான

## பேச்சுவார்த்தையில் மீண்டும் இஸ்ரேல் கலந்து கொள்ளும்

டெல்அவிவ், டிசம்பர் 28

ஐக்கிய நாடுகள்சபையின் மேற்காசிய சமாதானக்குழுவின் தலைவர் டாக்டர் குனர் ஜாரிங்கின் தலைமையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் கலந்துகொள்ள இஸ்ரேல் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இஸ்ரேல் மதக்கட்சியின் தீர்மானத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இஸ்ரேல் மந்திரிசபைக் கூட்டம் பிரதமர் திருமதி. கோல்டாமெயர் தலைமையில் நடைபெற்றது.

அரபுநாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையை டாக்டர் ஜாரிங் முன்பு ஆரம்பித்து வைத்தார்.

ஆனால் கடந்தவருடம் செப்டம்பர் மாதம் சுவஸ்கால்வாய்ப் பகுதியில் சோவியத் உதவியுடன் எகிப்து ஏவுகணைத் தளங்களை அமைத்ததைத் தொடர்ந்து இஸ்ரேல் சமாதானப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதில்லையென முடிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

இதே நேரத்தில், ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரேலியர் மனித உரிமைகளை மீறியுள்ளது சம்பந்தமாக விசாரணை செய்த கமிட்டி தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இதனை ஐ. நா. மகாசபையின் விசேட அரசியல் கமிட்டி ஆராய்ந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரேல் அரசாங்க அதிகாரிகள் நடத்தும் அட்டூழியத்தைக் கண்டித்து கினி, பாகிஸ்தான், மாலி, செனகல், இந்தோனேஷியா ஆப்கானிஸ்தான், மாரிதானியா ஆகிய நாடுகள் கொண்டுவந்த தீர்மானம் 49 வாக்குகளைப் பெற்று நிறைவேறியது. எதிராக 14 வாக்குகள் கிடைத்தன. தீர்மானத்தை எதிர்த்து அமெரிக்கா வாக்களித்தது.

முன்பு ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஒன்றுகூட நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதை விசேஷ கமிட்டி எடுத்துக்காட்டியுள்ளது.

## ‘பூரணத்துவமான பல்கலைக்கழகம் வேண்டும்’

தாவடி, திங்கள்

“யாழ்ப்பாணத்தில் சகலகட்டிட வசதிகள், போக்குவரத்து வசதிகள் இருக்கின்றபடியாலும், தொற்றுநோயற்ற பிரதேசமாக இருப்பதாலும் இங்கு பல்கலைக்கழகத்தை உருவாக்கும் செலவினத்தில் பெரும் பகுதியை மிகுதிப்படுத்தலாம். இங்கு பல்கலைக்கழகம் வரின் எம் சகோதர சகோதரிகள், வசதியாயிருந்து கல்வி பெறமுடிவதுடன். பெற்றோர்களுக்குத் தத்தம் பிள்ளைகளின் உயர் கல்வியால் ஏற்படும் செலவினங்களும் பெருமளவு குறைய வழியேற்படும். இந்துகலாச்சாரம், சங்கீதம், பரதநாட்டியம் ஆதியாம் கலைகளும் [illegible]போதிக்கவல்ல இந்து நாகரீகத்துறையை உள்ளடக்கிய ஒரு பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகத்தை நிறுவுவது மக்களரசின் கடமை”

மேற்கண்டவாறு யாழ்.

“உள்ளூராட்சி சேவைகளில்

## தொழிலாளர் ஆலோசனைச்சபை நிறுவ வேண்டும்”

யாழ்ப்பாணம், திங்கள்

“அரசாங்க தொழிலாளருக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும் ஸ்தலஸ்தாபன தொழிலாளருக்கும் வழங்கப்பட வேண்டுமென்றும், இலங்கைத் தொழிலாளருக்குப் பூரணத்துவமுடைய பென்ஷனும் இந்திய வம்சாவழியினருக்கு கட்டாய சேமலாபநிதித் திட்டமும் அமுல் நடத்தப்பட வேண்டுமென்றும் ஸ்தலஸ்தாபன ஆணையாளரைக் கோரும் தீர்மானங்களை யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய இலங்கை ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் 14-வது வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

ஒய்வு பெறும் ஸ்தலஸ்தாபன தொழிலாளருக்குப் பென்ஷன் வழங்குவதா, நன்கொடைப் பணம் வழங்குவதா, அல்லது சேமநல நிதி வழங்குவதா என்பது பற்றி முடிவெடுப்பதற்குள் தொழிலாளர் பெரிதும்

றென்றும், இவ்வித சட்டங்களை மாற்றிப் புதிய சட்டங்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும், தொழிலாளரின் சம்பளம் வழங்கும் போது அவர்களுக்குச் சம்பளவிபரம் எழுத்தில் வழங்க வேண்டுமென்றும், இந்திய வம்சாவழியினர் தமது பாஸ்போர்டுகளைப் புதுப்பிக்க அவர்களது சேவைக்கால விபரம் கேட்கப்படும் போது தாமதமின்றி அதனை வழங்கவேண்டுமென்று சகல சபைகளுக்கும் சுற்றுநிருபம் அனுப்பப்பட வேண்டுமென்றும் இதனால் லஞ்சம் முதலியன ஒழியுமென்றும் கேட்டுக் கொள்ளும் தீர்மானங்களும் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

மற்றும் அரசாங்க ஸ்தலங்களில் போல் சகல ஸ்தலஸ்தாபன சபைகளிலும் தொழிலாளர் ஆலோசனை சபைகள் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென ஆணையாளரைக் கேட்டுக் கொள்ளும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிய கட்டளையைப் பெறு வதற்கு நான் விரும்புகின்றேன் அதனால்தான் மந்திரி சபையைக் கூட்டி அதன் ஆலோசனையைப் பெற்ற பின் அதன் முடிவை ஜனாதிபதி திரு வி. வி. கிரியிடம் தெரிவித்தேன், என்று பிரதமர் இந்திரா தெரிவித்தார்.

இம்மாதம் 24-ம் திகதி இந்திரா காந்தி ஜனாதிபதி திரு. வி. வி. கிரியைச் சந்தித்தார். இதனை அடுத்து எதிர் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தனர். இதன்பின் மந்திரி சபையுடன் பிரதமர் இந்திரா கலந்தாலோசனை செய்தார். அவர்களின் ஆலோசனையின் பின் 27-ம் திகதி அவர் ஜனாதிபதியைச் சந்தித்து லோக சபையைக் கலைக்க வேண்டுமென்ற மந்திரி சபையின் தீர்மானத்தை ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

ஆட்சியில் இருக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் அக்கறையல்ல. மக்களின் மேலான வாழ்வும், சுதந்திர சுபீட்சமும் அரசின் அக்கறையாகும், ஜனநாயக அமைப்பில் அதிகாரம் மக்களிடமே இருக்கிறது. எனவேதான் புதிதாக மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பெறவிரும்புகின்றேன். சமூக பொருளாதார அரசியல் மேலும் சீர்திருத்தத்தைமக்கள்வேண்டி நிற்கிறார்கள். அவர்களுடைய உள்ளம் பொறுமை இழந்து தவிக்கின்றனர். அவர்களுடைய தவிப்பைப் போக்க பல சீர்திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்த முயற்சி செய்தது. இந்த முன்னேற்ற நடவடிக்கைகளை செயல்படுத்த முயன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிற்போக்கு சக்திகள், நாட்டில் பிற்போக்கு வாதிகளின் மறைமுகத் தூண்டுதல்களினால் மாணவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர். ஏழை மக்களினதும் நாட்டின் நலன்கருதியும் அரசாங்கத்தினால் கொண்டு வந்த ராஜ்ய மான்ய ஒழிப்பு மசோதா ஒரு வாக்கால் தோல்வி அடைந்தது. இதனைத் தொடர்ந்து மக்கள் நலத்தில் கொண்ட அபிலாசையினால் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கொண்டு அதனை நடைமுறைப் படுத்த முயன்றேன். அதனையும் சுப்ரீம் கோர்ட் செல்லாதெனத் தீர்ப்பளித்து விட்டது. இந்நிலையில் எனது அரசின் கொள்கைக்கு மக்களிடம் புதிய அதிகாரத்தை பெறுவதைத்தவிரவேறுவழியில்லை என்று உணர்ந்தே இந்நடவடிக்கையை எடுக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டேன்.

கள் ஜ..நாயகக் கட்சி இக் கட்சியின்தலைவரே திரு அலி பூட்டோ.

இதேவேளையில் கிழக்குப் பாகிஸ்தானில் பெரும்பான்மையிடங்களைப் பெற்ற அவாமி.. தலைவர் ஷேக் முஜிபர் ரஹ்மான் இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்க விருப்பந் தெரிவித்துள்ளார்.

'பைனான்ஷியல் ரைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையே உள்ள உறவுபோல கிழக்குப்பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்த தனது கட்சியின் ஆட்சிக்காலத்தில் முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்:

இருபகுதியினதும் பொருளாதார அடிப்படைகள் ஒன்றுக்கொன்று துணையாக இருப்பதினால் இவ்வுறவு அவசியமானது. எனவே இரு

...யானார். இதன்பின் மகன்... பேற்று வைத்தியத்திற்சிறப்புப்படிப்பை மேற்கொண்டார். ஜப்பான் சிங்கப்பூரை ஆக்கிரமித்தபொழுது இவர் சிங்கப்பூரில் வாழ்ந்து வந்தார் 1947-ல் உயர்கல்விக்காக லண்டன் பயணமானார், இதன்பின் டாக்டர் ஷியார்ஸ் ஏழாவது எட்வார்ட் அரசர் கல்லூரி மருத்துவப்பகுதிப்பதில் பேராசிரியரானார். 1950ல் சிங்கப்பூரிலுள்ள மலேயா பல்கலைக் கழக மகப்பேற்றுத்துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார் இவர் சான் பிரான்சிஸ்கோ, சிக்காக்கோ, செயின்லுயிஸ், நியுயோர்க், போஸ்ரன் ஆகிய இடங்களுக்கு விஜயஞ் செய்தார்:

...போதிக்கவல்ல இந்து நாகரிகத்துறையை உள்ளடக்கிய ஒரு பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகத்தை நிறுவுவது மக்களரசின் கடமை'

மேற்கண்டவாறு யாழ். இளைஞர் கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு. ரி. எம், விஜயகுமார் கூறினார். கூட்டத்திற்கு திரு. க. பரமானந்தம் தலைமைவகித்தார்.

மற்றும் திரு. எஸ். கே. தெட்சணாமூர்த்தி திரு. எஸ். ஆர். இரத்தினகோபால் திரு. எஸ். இராமலிங்கம் திரு. து. ஸ்ரீகிருஷ்ணராஜா ஆகியோரும் பேசினர்.

பென்ஷன் வழங்குவதா, நன்கொடைப் பணம் வழங்குவதா, அல்லது சேமநல நிதி வழங்குவதா என்பது பற்றி முடிவெடுப்பதற்குள் தொழிலாளர் பெரிதும் நஷ்டமடைந்து விடுகின்றன

ஸ்தாபன சபைகளிலும் தொழிலாளர் ஆலோசனை சபைகள் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென ஆணையாளரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

# இடைத் தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் வரவேற்பும் எதிர்ப்பும்



இந்திய லோகசபை கலைக்கப்பட்டது பற்றி பல எதிர்க்கட்சித் தலைவர்களும், ராஜ்ய முதன் மந்திரிகளும் வேறுபட்ட கருத்துத் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் தேர்தல் நிலைமை பற்றி ஆராய நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் நாளை கூடுகிறது.

"1972-ம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்து. அதன் பின்பு தேர்தல் நடைபெற்றால் தன்னை மக்கள் நிராகரித்துவிடுவார்கள் என்ற பயத்தின் காரணமாகவே இப்பொழுது லோகசபையைக் கலைத்து இடைக்காலத் தேர்தல் நடத்துமாறு இந்திரா ஜனாதிபதிக்கு ஆலோசனைக் கூறியிருக்கிறார்" என்று சுதந்திரக்கட்சித் தலைவர் எம். ஆர். மசானி கூறினார்.

கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) தலைவர் திரு. சுந்தரஐயா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ராஜேஸ்வர ராவ்ஆகியோர் வரவேற்றுள்ளனர். நாம் எடுக்கக் கூடிய முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு மக்களிடம் அனுமதி பெறுவதற்கு இது ஓர் நல்ல சந்தர்ப்பம் என்று இராஜேஸ்வரராவ் தெரிவித்தார்.

முஸ்லிம் லீக் தலைவர் திரு இஸ்மாயில் இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதை நாங்கள் வரவேற்கின்றோம் என்று சொன்னார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கையில், ஆட்சி மன்றக் கலைப்பை பிரதமர் தவிர்த்திருக்கலாம், இருந்தபொழுதிலும் நாங்கள் பொதுத்தேர்தலுக்குத் தயாராகவே இருக்கின்றோம் என்றார்.

லோக்சபையில் எதிர்க் கட்சிக் காங்கிரஸ் தலைவராகவிருந்த திரு. ராம் சுபக்சிங் அபிப்பிராயம் தெரிவிக்கையில், திருமதி இந்திராகாந்தியின் அரசாங்கத்தை இடைக்கால காபந்து அரசாங்கமாக ஜனாதிபதி நியமித்திருக்கக் கூடாது என்று கூறினார்.

ஜனசங் தலைவர் வாஜ்பாய் கருத்துத் தெரிவிக்கையில் அரசியல் திட்டத்துக்கும் ஜனநாயகத்துக்கும் மாறான முறையில்ஜனாதிபதி நடந்துகொண்டார் என்று கூறினார்.

சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கருத்துத் தெரிவிக்கையில், ஆளும் கட்சியை வீழ்த்துவதற்கு இதர கட்சிகள் ஒன்றுசேரவேண்டும் என்றார். இதே கட்சியைச் சேர்ந்த திரு. ராஜ்நாராயன் ராஜ்யசபையின் அவசரக்கூட்டத்தை கூட்ட வேண்டுமென்றும் ஜனாதிபதியைக் கண்டிக்கும் பிரேரணை கொண்டுவரவேண்டுமென்றும் கூறினார்.

சிறுபான்மை அரசாங்கத்துக்கு ஆட்சிமன்றத்தைக் கலைக்கும்படி ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்வதற்கு உரிமை இல்லை என்று திரு. ஆர். சார்பகிருபளானி கருத்து வெளியிட்டார்.

## "எதிர் பார்த்ததுதான்; உறுதியுடனிருக்கிறோம்"

ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டு இடைக்காலத் தேர்தல் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டது சம்பந்தமாக முதலில் கருத்து வெளியிட மறுத்த திரு. கே. காமராஜர் பின்னர் தெரிவிக்கையில், இது எதிர்பாராத விஷயமல்ல என்றார். இடைக்காலத் தேர்தலில் போட்டி போட்டு வெற்றியீட்ட உறுதி பூண்டிருக்கிறோம் என்று அவர் கூறினார்.

பழைய காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். நிஜலிங்கப்பா அபிப்பிராயம் தெரிவிக்கையில், மக்கள் ஜனநாயகத்தை விரும்புகிறார்களா, சர்வாதிகாரத்தை விரும்புகிறார்களா என்பதை இந்த இடைத்தேர்தல் தெளிவாக்கிவிடும் என்றார்.

## கிராமசேவகர் இன்றி மக்கள் கஷ்டம்

அம்பன், திங்கள்

நாகர்கோயில் அம்பன்பகுதிக்கு இங்குள்ள கிராம சேவையாளர்களது இடமாற்றத்தின்பின்னர் இதுவரையும் நிரந்தர கிராமசேவையாளர்கள் நியமிக்கப்படாததால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர், இவ்விருபகுதிகளுக்கும் குடத்தனை கரையூர் கிராம சேவையாளரே பதில் கிராம சேவையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

## உலக சட்ட மகாநாடு

கோட்டை, ஞாயிறு

அடுத்தாண்டு ஜனவரி மாதம் உலகசட்டமகாநாடு இந்தியாவில் நடைபெறவிருக்கிறது.

ஜனவரி 4ந் திகதி புதுடில்லியில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில்50க்குமேற்பட்ட நாடுகள் பங்குபற்றுகின்றன. ஜனவரி 4ந் திகதி தொடக்கம் ஜனவரி 13-ந் திகதிவரை இம்மகாநாடு நடைபெறுகிறது. இலங்கை சட்டநிபுணர்களும் இம்மகாநாட்டில் பங்குபற்றுகிறார்கள்

## மதிப்பான விவாகரத்துமுறை

கோட்டை, திங்கள்

உத்தேச விவாகரத்து சட்ட சீர்திருத்த மசோதாவின்படி இலங்கை விவாகரத்து முறையில் விவாகரத்தில் நேர்மை, மதிப்பு ஒழுக்கம் ஆகியன இடம் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

விவாகரத்தின் போதுகணவரினதோ அல்லது மனைவியினதோ சொந்த வாழ்க்கை இரகசியங்கள் மற்றவர்களுக்குத் தெரியாதவாறு அதாவது வெளிவராத முறையில் விவாகரத்துச் செய்துகொள்ள மேற்படி மசோதா வழிசெய்துள்ளது.

மற்றவர்கள் பார்த்துக் கேலிசெய்யத்தக்க வகையில் ஏமாற்றமுள்ளதாக தங்கள் குடும்பவிவகாரங்கள் அம்பலப்படுத்தப்பட்ட முறையில் மனக்குறையோடு விவாகரத்துச் செய்தலை முதல் தடவையாக மேற்படி மசோதாநீக்கி மதிப்புடன் ஒருகணவனும் மனைவியும் விவாகரத்து செய்து கொள்ள இச்சட்டம் இடமளித்துள்ளது.

## திருவெம்பாவை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் கொட்டடி இந்து வாலிபர்சங்கம் எதிர்வரும் தமது 11-ம் வருட திருவெம்பாவை பஜனையை மிக விமரிசையாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

இளைஞர்களை ஊக்குவிக்குமுகமாக இம்முறை போட்டிகளை நடாத்தி பரிசுவழங்க இச்சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இச்சங்க ஸ்தாபகர் திரு. ஏ. எஸ், குணரத்தினம் தெரிவித்தார்,

## அல்லைப்பிட்டி செய்திகள்

வேலணை கிழக்கைச் சேர்ந்த கந்தையா முத்துலிங்கம் என்பவரது வீட்டில் இரவு நேரத்தில் திருடர்கள் உட்புகுந்து இருநூற்றி ஐம்பது ரூபா பெறுமதி வாய்ந்த வானொலிப் பெட்டி யொன்றை திருடிச் சென்று விட்டார்களாம்.

வானொலிப் பெட்டியின் சொந்தக்காரர் ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

**வீதிகள் செப்பனிடப்பட்டன**

பல காலமாக போக்குவரத்துக்கு பாவிக்கமுடியாமல் சீர்கேடடைந்திருந்த வேலணை அம்மன் கோவில் வீதியை பெருவீதித் திணைக்களப்பகுதியினரும் வேலணை ஆலடி வைரவர் கோயில் வீதியை வேலணைக் கிராம சபையினரும் திருத்திச் செப்பனிட்டுள்ளார்கள்.

**மின்சார வசதி**

ஊர்காவற்றுறை, நாரந்தனை, வேலணை ஆகிய பகுதிகளுக்கு ஜனவரி மாத பிற்பகுதியில் மின்சாரவசதி கிடைக்க விருக்கின்றது. இதற்கானவேலைகள் பூர்த்தியடையும் கட்டத்தை நெருங்கியுள்ளன இம்மின்சாரம் காரைநகருக்கூடாக இப்பகுதிகளுக்குக் கிடைக்கிறது.

**ஏமாற்றம்**

வேலணை பொதுஜன நூல்நிலையத்திற்குச் செல்லும் வாசகர்கள் அங்கு பத்திரிகைகள் இல்லாமல் ஆடுர் மாடுகளின் வாசஸ்தலமாகக் காட்சியளிப்பதைக் கண்டு ஏமாற்ற மடைந்து செல்லுகின்றார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கு இம்மக்கள் புகார் செய்துள்ளனர்.

## "ஆலயக்கதவுகளைப் பூட்டி ஆத்ம ஈடேற்றம் பெற முடியாது"

உடுப்பிட்டி, திங்கள்

'ஆலயங்களின் கதவுகளைப் பூட்டிவைத்து ஆத்ம ஈடேற்றம் பெற விழைவது அறியாமை. இறைவனைத் தரிசிக்கும் வழி இதுவல்ல. மன இருள் நீங்கிப் பரிசுத்தமடையும்போதுதான் இறை தரிசனம் கிட்டும், ஆலயக் கதவுகளைப் பூட்டுவதன் மூலம் குரோதங்களும் அநாகரிகமுந்தான் வளரும். இது மனித தர்மத்திற்கு அப்பாற்பட்ட காட்டுமிராண்டித்தனமானசெயலாகும்'

இவ்வாறு தேவரையாளி இந்துக் கல்லூரியில் பல்லாண்டுகளாக ஆசிரியப் பணிபுரிந்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் திருவாளர்கள் ஆ, ம. செல்லத்துரை ச. சிவகுரு பெ அண்ணாசாமி ஆகியோரின் சேவை நலம் பாராட்டு விழாவில் பேசிய முதலியார் செ சின்னத்தம்பி குறிப்பிட்டார்.

அதிபர் திரு மு சி. சீனித்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் முதலியார் மேலும் பேசுகையில் யாழ்ப்பாண மக்களின் மாசாக உள்ள இக்கொடுமை துடைக்கப்படும், அன்றுதான் எமக்கெல்லாம் விடிவு காலம்என்றார்,

தெணியான், சைவப் புலவர் சி. வல்லிபுரம் திரு த. வீரசிங்கம் ஆசிரியரும் இன்னும் சிலரும் பாராட்டுரை வழங்கினர்,——

## ஒன்றரை லட்சம் செலவில் வாய்க்கால் வேலை

சாய்ந்தமருது, திங்கள்

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பண்டித்தீவு வடிச்சல் வாய்க்கால் வேலைகள் சுமார் ஒன்றரை லட்சம்ரூபாய் செலவில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்முனை ஆட்சிமன்றஉறுப்பினர்ஜனாப், எம். ஸி. அகமது இதுசம்பந்தமா முயற்சிகள் மேற்கொண்டிருந்தும் இதற்கான செலவுக்கு ஒன்றரை லட்ச ரூபாவை சம்பந்தப்பட்டமைச்சு ஒதுக்கியுள்ளதும் தெரிந்ததே,

இவ்வடிச்சல் வாய்க்கால் அமைக்கப்படும் பட்சத்தில் பெருந் தொகையான ஏக்கர் வேளாண்மைகள் பெரும்பயனடையும் என நம்பப்படுகிறது.

## திருட்டு

மாவிட்டபுரம், திங்கள்

உரும்பராயில் உள்ள வீடொன்றில் இருந்து 1500 ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுவிட்டனவாம். உரும்பராயைச் சேர்ந்த இராசசுந்தரம் சௌந்தரம் என்னும் பெண்ணின் வீட்டில் தாலிக்கொடி உட்பட 1500 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதாக சுன்னாகம் பொலிசில் புகார்செய்யப் பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து சப்- இன்ஸ்பெக்டர் கே. என், தர்மதாசாவின் உதவியுடன் புலன்விசாரணையில் ஈடுபட்ட சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். நவரத்தினராசா தீவிர விசாரணையின்பின் பொருட்களைக் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின்பேரில் ரபிறஞ்சித் என்பவரையும் கைதுசெய்து பாதுகாப்பில் வைத்துள்ளார்.

புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

**தாவடியில்**

தாவடியில் ஒலிபெருக்கி உதிரிப்பாகங்கள் திருட்டுப்போனது சம்பந்தமாக இருவர் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டுள்ளனர் திருட்டுப்போன பொருட்கள் கிளிநொச்சியில் விற்கப் பட்டுள்ளனவாம். தாவடியைச் சேர்ந்த ஏ. நடேசு என்பவரின் 700 ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி உதிரிப் பாகங்கள் திருடப்பட்டு விட்டதாக சுன்னாகம்பொலிசில் புகார்செய்யப்பட்டதையடுத்துப்புலன்விசாரணையில் ஈடுபட்டசுன்னாகம்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். எஸ். நவரத்தினராசாவுக்கு மேற்படி உதிரிப்பாகங்கள் கிளிநொச்சியில் உள்ள ஒருவருக்கு விற்கப்பட்டதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து பொலிஸ்கான்ஸ்டபிள்களான அலடின், எட்வேட் ஆகியோர் கிளிநொச்சிக்குச்சென்று விசாரணை செய்ததன் பயனாக இருவர் கைதுசெய்யப்பட்டனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

கடவுளை வழிபடும் முறையைச் சனங்களுக்குப் போதிப்பதால் நாட்டில் அறியாமை நீங்கும்; பாவம் தேயும், புண்ணியம் வளரும்.

—ஆறுமுகநாவலர்


# ஈழநாடு

Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49; Jaffna Telephone: 389

சாதாரண வருஷம் மார்கழி மாதம் 14-ந் திகதி (29-12-70)


## இந்திய இடைத்தேர்தல்

இந்திய ஆட்சிமன்றம் (லோக்சபா) கலைக்கப்பட்டு விட்டது. இன்னும் சில மாதங்களுக்குள் இடைக்காலத் தேர்தல் நடைபெற விருக்கிறது. ஆளும் கட்சியான அகில இந்தியக் காங்கிரஸ் பிளவுபட்டு 'சிண்டிகேட்' 'இண்டிகேட்' என்று இரண்டாகப் பிரிந்த காலத்திலிருந்தே ஆட்சிமன்றம் கலைக்கப்படுமென்றும் இடைக்காலத் தேர்தல் நடைபெறுமென்றும் அங்கு எதிர்க் கட்சி வட்டாரங்கள் எதிர்பார்த்தன. ஆனால் ஆட்சிமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் குறைந்ததாலும் இதர முற்போக்குக் கட்சிகளின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தொடர்ந்து ஆட்சியிலிருந்துவந்தார். அவரது நம்பிக்கை வீண்போகவில்லை என்பது உண்மையே. ஆயினும் அவர்களின் ஆதரவையே நம்பியிருக்கவேண்டியதால் தாம் விரும்பாத சில விஷயங்களுக்கும் கூட விட்டுக்கொடுத்து ஒப்புக்கொண்டு நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்த நிலையும் ஏற்பட்டது. இதனால் தமது லட்சியத்தை சரிவர நிறைவேற்ற முடியாது போவதுடன் மாற்றுக் கட்சிக்காரரின் கண்டனத்தையும் சமாளிப்பதற்கே தமது நேரத்தைச் செலவிட வேண்டிய நிலையும் பிரதமர் இந்திராவுக்கு ஏற்பட்டது. தீவிரவாதிகளின் கிளர்ச்சிகளும் வன்முறைச் செயல்களும் ஒருபுறம் நெருக்க, அதிகார ஆசைகொண்டவர்கள் வகுப்புவாதம் முதலிய பிற்போக்கான செயல்களைத் தூண்டிவிட ஒரு நெருக்கடியான நிலையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசாங்கம் மீண்டும் மக்களிடமே தமது இலட்சியத்தையும் கொள்கையையும் மக்களின் விருப்பத்தையும் அறிந்துகொள்ள அவர்களின் கருத்தை... ஒரு சிலர் சுகபோக வாழ்வை அனுபவிக்க மற்றும் பலர் கஷ்டப்பட்டு வாழும் நிலையை மாற்றியமைத்தால்தான் உண்மையான சமத்துவ சமுதாயத்தை அமைக்க முடியும் என்பதையும் அவர் தெரிந்திருந்தார். இதனால்தான் முன்னாள் சமஸ்தானாதிபதிகள் அனுபவித்துவந்த சலுகைகளை ஒழித்துக்கட்ட அவர் முனைந்தார். மாஜிமன்னர்களின் சலுகைகள்மட்டுமல்ல வேறு பல பிரச்னைகளிலும் நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்யவும் உண்மையான சமத்துவத்தையும் ஏற்படுத்துவதற்கும் நாட்டின் அரசியல் அமைப்பு இடையூறாக இருப்பதை அவர் தெரிந்துகொண்டதனால் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வாய்ப்பிருந்தும் விரும்பாமல் இடைத்தேர்தல் நடத்த வேண்டுமெனத் தீர்மானித்தார். ஜனநாயகத்தில் திருமதி இந்திரா காந்திக்குள்ள நம்பிக்கையையே இது எடுத்துக்காட்டுகிறது.


ஜனநாயகத்தைப் பற்றிப் பேசும் அந்த நாட்டு எதிர்க்கட்சிகள் உண்மையிலேயே ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருந்தால் காளான் கட்சிகளை ஒழித்துக் கட்டி பலம் வாய்ந்த இரண்டு மூன்று கட்சிகளை அமைத்து ஆளும் கட்சியைச் சரியான வழி நடத்தக்கூடிய பலம் வாய்ந்த எதிர்க் கட்சியை உருவாக்கலாம்.

இந்தியாவில் இன்றுள்ள நிலையில் காளான் கட்சிகளே அதிகமாக இருப்பதாலும் எவர் எப்போது கட்சி விட்டு கட்சி மாறுவார் என்ற நம்பிக்கை இல்லாதிருப்பதாலும் எந்தக் கூட்டணி அமைத்து இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டாலும் ஸ்திரமான ஆட்சியையோ பலம் வாய்ந்த எதிர்க்கட்சியையோ

# புதிய ஆண்டில் இலங்கையில் தொழில் வளம் பெருகும்

## உலக நாடுகளில் என்ன நிகழும்?

— மண்டைதீவு கா. மகேஸ்வரலிங்கம் —




நிகழும் சாதாரணவருடம் மார்கழிமாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு 12மணியளவில் பூர்வபக்க சதுர்த்தித் திதியில், அவிட்ட நட்சத்திரம் 2-ம் பாதத்தில் வச்சிரயோகத்தில் பவகரணத்தில், கன்னியா லக்கினத்தில் இடப நவாம்சத்தில் சுக்கிரகாலவோரையில் சூரிய சூக்குமவோரையில் தாமதகுண வேளையில் நட்சத்திரப்பட்சியாகிய மயில்சாவுத்தொழிலும் சூக்குமப்பட்சி நடைத்தொழிலுஞ் செய்யுங்காலத்தில் புத்தாண்டு 1971 உதயமாகின்றது'

செவ்வாயின் நட்சத்திரமாகிய அவிட்டத்தில் இவ்வாண்டு ஆரம்பித்திருப்பதால் தானியவிருத்தி கடல்படுதிரவியம் சேரல், தீரச்செயல்களில் உலகமக்கள் தீவிரமுயற்சி எடுத்தல் ஒவ்வொரு நாடும் தமது ஆதிக்கத்தையும் புகழையும்பரப்ப எத்தனித்தல் அதேவேளையில் அடக்கப்படும் நாடுகள் சுதந்திரத்திற்குப் போராடுதல் எல்லைப்பிரச்சினை உச்சக்கட்டத்தையடைதல், சங்கீதக் கலைவளர்ச்சி முதலியன உண்டாகும்.

செவ்வாய்க்கிரகம் வக்கரம் செய்யும் சனிக்கிரகத்தால் எதிர்நோக்கப் படுவதால் உலகில் அநேக நாடுகளில் அரசியல் கொந்தளிப்பும், வாழ்க்கைச் செலவு மலைபோல் ஏறுதலும்பஞ்சம் நோய் பரவுதலும், அரசியல் வாதிகள் ஆத்மீகத் தலைவர்கள் நோய்வாய்ப்படலும், அவர்களில் ஒருசிலர் மறைதலும் ஏற்படும்.

செவ்வாய் சனியினது உச்சவீட்டில் இருந்தும் சனி செவ்வாயினுடைய சொந்த ஆட்சி வீட்டில் இருந்தும் ஒருவரை ஒருவர்எதிர்நோக்குவதால் கன்னியாலக்கினத்திற்கு இக்கிரகங்கள் முறையே அட்டம சத்துருத்தானதிபர் என்ற ரீதியில் உலகில் முதலாளித்துவ நாடுகளுக்கும் சமதர்ம நாடுகளுக்கும் கருத்து வேற்றுமை பலப்பட்டு கெடுபிடி யுத்தங்களாக ஆரம்பித்து உலகயுத்தமாக உருவாக இடமுண்டு' செவ்வாயும் சுக்கிரனும் பரிவர்த்தனம் செய்தும் புதன் குரு சுக்கிரன் இம்மூன்று சுபக்கிரகங்களும் செவ்வாய்க்கிரகத்திற்கும் சூரிய சனிக்கிரகங்களுக்கு மிடையில் சிக்கி எதுவித சுபபலனையும் அளிக்க முடியாத நிலையில் இருப்பது உலகின் உண்மைக்கும் சமாதானத்திற்கும் பாடுபடும் ஐ. நா.வின் பேச்சிற்கு மதிப்பில்லாது போகச்செய்யும் அதேவேளையில் சில நாடுகளில் பேச்சு எழுத்துச்சுதந்திரம் பாதிக்கப்பட்டு யுத்தங்கள் ஆரம்பித்து அதிக உயிர்ச்சேதமும் அழிவும் உண்டாகும். அத்துடன் உலகின் சிலஇடங்கள் இயற்கையின் சீற்றத்திற்குள்ளாகும். அதிர்ஷ்டவசமாக செவ்வாய் வியாழனுடைய நட்சத்திரத்திலும் சனி சுக்கிரனுடைய நட்சத்திரத்திலும் தற்போது சஞ்சரிப்பதால் ஈற்றில் மனிதனை மனிதன் பேணவேண்டும் என்ற உண்மையை உணரும் சூழ்நிலை உருவாகி சமாதானமும் சாந்தியும் நிலவும் விஞ்ஞானத்தினால் விசித்திரங்கள் நிகழ்ந்தபோதிலும் ஆத்மீகத்துறை வளர்ச்சி உயர்ந்தோங்கும்.

கல்வி சம்பந்தமாக அநேக நாடுகளில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அவர்களின் அரசியல் ஈடுபாடு நாட்டிற்கும் அரசினருக்கும் தொல்லை தருவதுடன்கல்வியைப் போதிப்போருக்கும் கல்விக்கூடங்களுக்கும் இவ்வாண்டு மிகவும் மந்தமானதாக இருக்கும்.

தமிழ்ப்பேசும் உலகிற்கு இவ்வாண்டும் சோதனைக் காலம். உலகில் தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்குள்ள அரசியல் கட்சிகளெல்லாம் ஒரே நோக்குடன் அவர்களின் தரத்தைக் குறைக்க முற்படும். சுபக்கிரகங்கள் சந்திரனுக்கு லாபஸ்தானத்திலிருப்பதால் ஈற்றில் அவர்கள் சில சில சலுகைகளைப் பெறும் வாய்ப்பும் உண்டு.

சிறுபோன்ற மகரராசியால் ஆளப்படும் தேசங்களை முதலாளித்துவ நாடுகள் மாத்திரமன்றி சமதர்ம நாடுகளும் வெறுத்து எதிர்பாராத விரோதத்தை உருவாக்க இடமுண்டு, எல்லைத் தகராறும் உச்சநிலை அடையும்.

இந்தியாபோன்ற கடகராசியால் ஆளப்படும் நாடுகளில் பலகட்சிசேர்ந்த ஆட்சிமுறை ஆரம்பித்தலும் பிறநாட்டு உறவுகளில் சில மாற்றங்கள் ஏற்படுதலும் கல்வி சம்பந்தமான கஷ்டமும் திருத்தமும் உண்டாகும்

துலாலக்கினத்தினால் ஆளப்படும் இலங்கை போன்ற நாடுகளில் (சுதந்திரம் பெற்ற ஜாதகப்படி) உடனுக்குடன் சட்டங்களை மாற்றும் நோக்கத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தாமதமாகுதலும் உள்நாட்டில் சில சிக்கல்கள் ஆரம்பித்து அடங்குதலும் தொற்றுநோய் பரவுதலும் சில அரசியல் வாதிகள் நோய்வாய்ப்படுதலும்மறைதலும் உண்டு, சில நேச நாடுகள் உறவைத் துண்டித்தலும், துறைமுகங்கள் தொழிற்சாலைகள் உற்பத்தியாகுதலும் தொழில் விருத்தியும் உண்டு.

மேடலக்கினத்தால் ஆளப்படும் நாடுகளில் உத்தியோகம், தொழில் சம்பந்தமான தொல்லையும் தொழிலாளர் கொந்தளிப்பும் பிறநாட்டுத் தொடர்புகளில் மாற்றமும் யுத்த ஆர்ப்பாட்டமும் ஏற்படும்.

அமெரிக்கா போன்ற மிதுனலக்கினத்தால் ஆளப்படும் நாடுகள் பிறநாடுகளுக்கு உதவுவதில் பாகுபாடு காட்டுவதின் மூலமும் ஆக்கிரமிப்பு வழியிலும் தவறுகள் உண்டாகி அரசியல் கொந்தளிப்பும் உண்டாகி யுத்தக் கெடுபிடிகள் ஆரம்பிக்க இடமுண்டு.

# இலங்கைக்கு அமெரிக்க வாலிபர்கள் நன்றி!

"இலங்கைக்கு அமெரிக்கர்களாகிய நாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்கள். அமெரிக்க வாலிபர்கள் தவருன வழிகளில் சென்று திகைத்துக் கொண்டிருக்கையில் இலங்கையிலிருந்து சுவாமி சச்சிதானந்தர் அவர்கள் அங்கு வந்து, திகைக்கும் வாலிபர்களைக் கையேற்று அவர்களுக்கு நல்வழிகாட்டி காப்பாற்றி வருகிருர். அவரை அங்கு அனுப்பி வைத்தமைக்காக நாங்கள் இலங்கைக்கு என்றும் நன்றி செலுத்துகின்ருேம்"

என்று ஐக்கிய நாடுகள் சபையில் வேலைபார்க்கும் ஓர் இத்தாலியப் பெண்மணி, சென்ற வெள்ளியன்று கொழும்பு மோடி மண்டபத்தில் சுவாமி அவர்களுக்கு திவ்ய ஜீவன சங்கத்தார் அளித்த வரவேற்பின் போது குறிப்பிட்டார். சுவாமியுடன் அவரும் மற்றும் பல அமெரிக்க வாலிபர்களும் வந்திருக்கிருர்கள். இளம் வயதுள்ள அந்த இத்தாலியப் பெண்ணுக்கு 'அம்மா' என்று தமிழ்ப் பெயர் இட்டிருக்கிருர்கள். எல்லா சிஷ்யர்களையும் அவர்களுக்கு இட்டுள்ள தமிழ்ப் பெயரால் சுவாமி அழைக்கின்ருர். சிஷ்யர்கள் தமிழ் முறையிலேயே உடுத்துள்ளனர். பெரும்பாலோரும் ஜபமாலையை சட்டைக்குமேல் அணிந்திருக்கின்றனர்.

'இன்றைய அமெரிக்க வாலிபர்களில் பெரும்பாலோருக்கும் வீட்டில் அன்பில்லை. பள்ளிக்கூடத்திலோ சமய ஸ்தாபனங்களிலோ அன்பில்லை. அதனால் மனமுடைந்த நிலையில், பணத்தால் இன்பம் காணலாமென்று ஏதேதோ செய்கிருர்கள். மயக்க மாத்திரைகளைச் சாப்பிடுகிருர்கள், முடிவில் அதிலும் ஏமாற்றம், இப்படி அவர்கள் திகைக்கும் சமயத்தில் தான்

சைவ உணவுப் பிரயாணிகள் முன்கூட்டியே தங்கள் உணவு பற்றி தெரிவிக்கவில்லை. விமான சிப்பந்தி அமெரிக்க சிஷ்யர்களிடம் "நீங்கள் அமெரிக்கர்தானே, வந்தவர்களுக்கு உங்களுக்காகச் சமைத்துள்ள சைவ உணவைத் தருகிருேம் நீங்கள் மற்ற உணவை இன்று மட்டும் சாப்பிடலாம்தானே. அவர்களுக்கு உங்கள் உணவைத் தரலாமா?" என்று அனுமதி கேட்டாராம், 'சரி' என்று இவர்கள் கூறவே, புதிதாக வந்தவர்களுக்கு சைவ உணவைப் பரிமாறினர். பின்னர் மற்ற உணவை அமெரிக்க சிஷ்யர்களுக்கு வைக்க முற்பட்டதும், 'இது தேவையில்லை. எங்களுக்குப் பசியுமில்லை. ஏதாவது பழரசம் இருந்தால் தாருங்கள். விமானத்திலிருந்து இறங்கியதும் நாங்கள் சாப்பிடுகிருேம்" என்று அவ்வளவு பண்புடன் கூறி, அநேகமாகப் பட்டினி கிடந்தனராம். ஏகாதசி முதலிய நாட்களில் உபவாசமிருப்பதாயும், புகைப்பது, குடிப்பது எல்லாம் விட்டு, புதிய தூய மனிதர்களாகியுள்ளதாயும் சுவாமி ருசியான இக்கதையைச் சொன்ஞர்.

சுவாமி பேசுகையில் அந்த அமெரிக்க சிஷ்யர்கள் பலர் கண்களை மூடிக்கொண்டு அமைதியாக தியானத்தில் இருந்தனர். அவர்கள் முகத்தில் சாந்தம் நிறைந்திருந்தது. எல்லாரும் வாலிபர்கள். 22 வயதுக்குள்தான் இருக்கும். யோக வழிகளில் முழுமனதுடன் உண்மையாய் ஈடுபட்டுள்ள அவர்கள் இன்னும் சில வருடங்களில் கீழ்த்திசை நாடுகளுக்கு வந்து நமக்கெல்லாம் யோக வழிகளைக் கற்பிக்கலாமென்று சுவாமி அவர்கள் கூறினர். ஆனால் அவர்கள் ஏற்கனவே இந்தப்பணியில்

## 'முயற்சியும், நேர்மையும் என்றும்வெற்றியடையும்'

### பல்கலைக்கழக புதிய மாணவர் வரவேற்பு விழா

பேராதனை, திங்.

'முயற்சியும் நேர்மையும் என்றும் வெற்றியடையும், அதுஒருபோதும்தோல்விக்கு இட்டுச்செல்லாது. பல்கலைக்கழக வாழ்க்கையிலும், ...பும் பண்பும் நிறைந்த வரவேற்பினை இந்து மாணவர் சங்கம் ஒழுங்கு செய்தமை போற்... புதிய... மாணவர்களுக்கு அமை...

'வெங்காயம்; மிளகாய்

## உத்தரவாத விலை போதாது என்பது உண்மையே'

— வர்த்தக அமைச்சர்

யாழ்ப்பாணம், புதன் உள்நாட்டு உற்பத்தியாளர்களை உற்சாகப்படுத்தி நாட்டின் அந்நிய செலா...

## சென்னை இசைவிழா




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

துண்டிலுள்ள ஒரு நெருக்கடியான நிலையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசாங்கம் மீண்டும் மக்களிடமே தமது இலட்சியத்தையும் கொள்கையையும் மக்களின் விருப்பத்தையும் அறிந்துகொள்ள அவர்களின் கட்டளையைக் கோருவதைத் தவிர வேறு வழியில்லை. திருமதி இந்திரா காந்தி இதையே செய்திருக்கிறார்.

மறைந்த மேதை பண்டித ஜவஹர்லால் நேரு நினைத்திருந்தால் அவருக்கிருந்த செல்வாக்கிற்கு அவரே ஆயுட்கால ஜனாதிபதியாகவும் அவரது வாரிசுகளே நாட்டின் தலைவர்களாகவும் இருக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்க முடியும். திருமதி இந்திரா காந்தியைப் பிரதமராகத் தெரிவுசெய்ய காங்கிரஸ் தீர்மானித்ததும் நேரு குடும்பத்தின் செல்வாக்கை உணர்ந்துதான் என்று சொல்வதும் தவருக இருக்க முடியாது.

இந்திய மக்களின் வாழ்க்கைப் பிரச்னையை நன்ருக உணர்ந்து தெரிந்துகொண்டவர் திருமதி இந்திரா வார் என்ற நம்பிக்கை இல்லாதிருப்பதாலும் எந்தக் கூட்டணி அமைத்து இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டாலும் ஸ்திரமான ஆட்சியையோ பலம் வாய்ந்த எதிர்க்கட்சியையோ அமைக்க முடியுமென்று சொல்வதற்கில்லை.

ராஜமான்ய ஒழிப்பு உத்தரவை இந்திய சுப்ரீம்கோர்ட் நிராகரித்த போதே இந்தியாவில் விரைவில் தேர்தல் நடைபெற்ருல் ஆச்சரியப்படுவதற்கில்லையென்று நாம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். மாஜி மன்னர்களும் வெளிச்சக்திகளும் தங்கள் சக்தியைப் பயன்படுத்துமென்பதை எதிர்பார்த்து திருமதி இந்திரா காந்தி விழிப்புடன் இருக்கவேண்டும்.

உலகம் இப்போது முன்ஞேக்கிச் செல்வதால் திருமதி இந்திராவின் முற்போக்குக் கொள்கைகளுக்கு இந்திய மக்களின் பேராதரவு கிடைக்கலாமென்று நம்பலாம்.

# திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

நல்லூர், திங்கள்

திருவெம்பாவை நாட்களான ஜனவரி முதல் திகதியிலிருந்து 10-ம் திகதிவரை திருக்கேதீச்சரம்- திருவாசக மடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட ஆதரவில் சாதனையும் திருவாசக விழாவும் கொண்டாடப்படவிருக்கிறது. இரு தினங்களில் அதிகாலையிலிருந்து திருவெம்பாவை பாராயணமும் ஆலய வழிபாடும் மற்றும் புராண படனம் கூட்டு வழிபாடு, திருவாசக பாராயணம் ஆகியனவும் இறுதிநாளில் அதிகாலை ஆருத்திரா தரிசனமும் மகேசுர பூசையும் நடைபெறும்.

விழாத்தினங்களான பத்து நாட்களிலும் சித்தாந்தச் செம்மல் சி கணபதிப்பிள்ளை, திருவாளர்கள் சி. சரவணமுத்து, க. தருமலிங்கம், சின்னத்துரை, சி இ சதாசிவம்பிள்ளை, ஆ. தாமோதரம்பிள்ளை, பண்டிதர் செ நடராசா, சைவப்புலவர் சு செல்லத்துரை, பண்டிதர் மு ஆறுமுகம், பண்டிதர் க மயில்வாகனம், வித்துவான் சி குமாரசுவாமி 'கரவை கிழார்', க கணேசு செ குணபாலசிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதை பா புனிதவதி ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவுகள் ஆற்றுவர்,

8-ந்திகதி திருமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு செ சிவஞானம் தலைமையில் நிகழும் விழாவில் திருமயிலை கா. சோ. காஞ்சனமாலை அம்மையார் உரையாற்றுவார்.

## பட்டமளிப்பு

7- திகதி நடைபெறும் திருவாசகவிழாவில் ஈழத்தின் 14 சைவப் பெரியார்களுக்கு காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீன குருமகா சந்நிதானம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளிய பட்டங்களை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ச. கதிர்காமநாதன் வழங்கி உரையாற்றுவார். மாந்தைக் காரியாதிகாரி திரு. மு. சுப்பிரமணியம் இவ் வைபவத்திற்குத் தலைமை வகிப்பார்.

பட்டம் பெறும் சைவப் பெரியார்கள் விபரம் வருமாறு:

பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை, சித்தாந்தச் செம்மல் சி கணபதிப்பிள்ளை, சைவப் புலவர் த குமாரசுவாமிப் பிள்ளை, திரு வே க கந்தசாமி, சிவஸ்ரீ சோ சுப்பிரமணியக் குருக்கள், வித்துவான் பொன் அ கனகசபை திருவாளர்கள் மு சிவராசா, ஆர் முத்துசுவாமி க கனகராசா, இரா. குழந்தைவேல், சி சரவணமுத்து, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி சரோஜினி தனபாலசிங்கம்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பல்கலைக்கழக புதிய மாணவர் வரவேற்பு விழா

பேராதனை, திங்.

'முயற்சியும் நேர்மையும் என்றும் வெற்றியடையும், அது ஒருபோதும் தோல்விக்கு இட்டுச்செல்லாது. பல்கலைக்கழக வாழ்க்கையிலும், இந்துமாணவர் சங்கம் எடுத்துக்கொண்ட முருகன் கோவில் கட்டட முயற்சிகளிலும், அதை நடத்துவதற்குப் பட்ட கஷ்டங்களிலும் இருந்து, இதை அனுபவமாக உணர்ந்துள்ளேன்'.

இம்முறை பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றிருக்கும் புதிய மாணவர்களுக்கான வரவேற்புவைபவத்தில் இவ்வாறு பேராசிரியர் கனகசபாபதி கூறினர். இந்து மாணவர் சங்கம் இந்நிகழ்ச்சியினை பல்கலைக்கழக குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் ஒழுங்கு செய்தது. புதியமாணவர்கள் அனைவரும் அங்கு சமுகமளித்திருந்தனர். விசேட அபிஷேகம் பூஜை ஆராதனை, கூட்டுறவுப் பிரார்த்தனைகளைத் தொடர்ந்து வரவேற்புரைகள் நிகழ்ந்தன.

சங்கத்தலைவர் திரு ஜெயபாலன் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தைப்பற்றியும் அதனைக்கட்டியெழுப்ப மாணவர்கள் பட்ட சிரமத்தைபற்றியும் அதனை நடத்துவதற்கு சங்கம் எடுத்துவரும் முயற்சிகளையும் விரிவாக எடுத்துக் கூறினர். இக்கோவிலை தமிழ்மக்களின் கலை, கலாச்சார, மறுமலர்ச்சிக்கான ஒரு இலட்சிய நிலையமாகவும், இந்துக்களின் சமய நெறிக்கு ஓர் எடுத்துக்காட்டான கோவிலாகவும் நடாத்துகிருேம். ஆகவே புதிய மாணவர்களும் இதில் கைகொடுத்து தங்கள் தங்கள் பங்கினையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சார்பில் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி சு வித்தியானந்தன் புதிய மாணவர்களை வரவேற்ருர்.

பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பிற்கு மாறுக தனித்துவம் வாய்ந்த, அன்பும் பண்பும் நிறைந்த வரவேற்பினை இந்து மாணவர் சங்கம் ஒழுங்கு செய்தமை போற்றுதற்குரிய ஒன்ருகும். புதியசூழ்நிலையில் வந்திருக்கும் மாணவர்களுக்கு அமைதியும் ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கக்கூடிய இடம் குறிஞ்சிக்குமரன் ஆலயம் ஆகையால் மனக்கவலை எவ்வகையைச் சேர்ந்ததாயினும் மாற்றுவதற்கு ஏற்ற இடம் குறிஞ்சிக்குமரன் ஆலயமே, இலங்கையிலுள்ள சங்கங்களுள் உயிர்த்துடிப்பும் செயல் திறனும், இலட்சியப்பற்றும், நேர்மைப்பண்பும் கொண்டது இந்துமாணவர்சங்கம். இச்சங்கம் எல்லோர்க்கும் கலங்கரைவிளக்கெனத் திகழ்கின்றதென அவர் தம் பேச்சின் மத்தியில் குறிப்பிட்டார்.

இச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் கனகசபாபதி ஆலயத்தின நிர்மாணத்திற்கும் அதனை நடத்துவதற்கும் எடுக்கும் முயற்சிகளைப்பாராட்டினர், கப்பலைச் சுக்கான் எவ்வாறு, தான் கொண்ட இலட்சிய இடத்தையடைய உதவுகிறதோ அதேபோன்று இளமைத் துடிப்பும் செயல் திறனும் கொண்ட இளைஞர்கள் ஆக்க வழியில் இட்டு அவர்களுக்கு நல்லநெறியினைக் காட்டும் நேர்மையும் கண்ணியமும் உடையவர் என்று கூறினர்

மேலும் எமது இனம் என்றும் பெருமையோடு வாழ வேண்டுமானல் எமது மொழியும் கோவில்களும் பாதுகாக்கப்பட வேண்டும். இதை அடைவதற்கு இந்துக்கள் எல்லோரும் தத்தம் வேற்றுமைகளைக் களைந்து பொருமை, அழுக்காறு முதலியவைகளை நீக்கி ஒன்றுபட்டு சைவத்தைப் பேண வேண்டும் என்று கூறினர்.

புதிய மாணவர்களுக்கு பழைய மாணவர்கள் மதிய உணவு சைவமுறைப்படி வழங்கினர். பின் பண்டிதர் க. வடிவேலின் 'குறிஞ்சிக் குமரன்' எனும் கதாப்பிரசங்கத்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கிய இலங்கை ஸ்தலதாபன தொழிலாளர் சங்கத்தின் 15-வது ஆண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: ரி பி தவுலாகல, உபதலைவர்கள்: வி நட்சத்திரம், எஸ் சின்னமுத்தையா, இணைக்காரியதரிசி: ஆர் செல்லையா, உப காரியதரிசி: ஸ்டிவன் குருஸ், தனதிகாரி: எஸ் ஏ புரம்பிசிங்கோ. மற்றும் 9 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

# என்பது உண்மையே'

— வர்த்தக அமைச்சர்

யாழ்ப்பாணம், புதன்

'உள்நாட்டு உற்பத்தியாளர்களை உற்சாகப்படுத்தி நாட்டின் அந்நிய செலாவணியை மிச்சம் பிடிக்கவே அரசாங்கம் விரும்புகிறது'

இவ்வாறு வடபகுதி விளைபொருள் விற்பனவுச் சங்கம் பாம்கோர்ட்டில் அளித்த வரவேற்பின் போது உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி பி இலங்கரத்ன தெரிவித்தார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'சின்ன வெங்காயம் மிளகாய் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள உத்தரவாத விலை போதியதல்ல என்பதை நாம் ஏற்றுக்கொள்கிருேம், விவசாயியினுடைய வருவாய் அதிகரிக்கவேண்டும், ஆகக்குறைந்தது ஒரு விவசாயி மாதமொன்றுக்கு இருநூறு ரூபாயாவது வருவாய்பெற வேண்டும் இது அவனது அடிப்படை வருவாயாக இருக்க வேண்டுமென்பதே எம் விருப்பமாகும் விவசாயிக்கு மட்டுமல்ல இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனும் இந்த நிலையை அடைய வேண்டுமென்பதே எமது விருப்பமாகும் உரக்கூட்டுத்தாபனம் நெற்பயிருக்குரிய உரத்தை மட்டுமல்ல உப உணவுப் பொருட்களுக்குரிய உரத்தையும் விநியோகம் செய்யும்''

## பாராட்டு கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

துன்னலை தெற்கு கிராம சேவகர் திரு வி. பொன்னம்பலம் காரைநகருக்கு இடமாற்றலாகிச் செல்வதையொட்டி நாளை அவருக்கு பிரியாவிடை விருந்துபசாரம் சமாதானநீதிபதி திரு ஆ. குலேந்திரன் தலைமையில் நடைபெற விருக்கிறது.

துன்னலை தெற்கு தயாநிதி கி மு சங்கம், சனசமூக நிலையம் சார்பாக நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் நியமன எம் பி திரு. எம் சி சுப்பிரமணியம், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா, வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம், மகாசபை நிர்வாகக் காரியதரிசி திரு எஸ் செல்லையா ஆகியோர் உரையாற்றுவார்கள்.

ஏற்கனவே நிறுவப்பட்ட சமாதானசபை அன்றைய தினம் புனருத்தாரணம் செய்யப்பட விருக்கிறது.

## சென்னை இசைவிழா

சென்னை, டிசெம். 29

இன்றைய நிகழ்ச்சிகள்:

மியூசிக் அக்கடமி சார்பில் அக்கடமி மண்டபத்தில் பிற்பகல் 1-30: கமலா வெங்கட்ராமன்— பாட்டு. பிற்பகல் 3-00: சி. வி. நாகராஜ் — பாட்டு. பிற்பகல் 5-30 இராமநாதபுரம் கிருஸ்ணன் பாட்டு. இரவு 8-30 மல்லிகார்ஜன் மன்சூர்— இந்துஸ்தானி சங்கீதம்.

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் ஆதரவின்கீழ் வாணி மகாலில்:

பிற்பகல் 3-30: வீரேஸ்வர் மந்திர் — வயலின் கச்சேரி. இரவு 6-00 மதுரை சோமசுந்தரம் — பாட்டு. இரவு 9- 30: ஆர். வேதவல்லி—பாட்டு.

தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவின்கீழ் ராஜா அண்ணமலை மன்றத்தில்-

இரவு 9-30: பி. ராஜம் ஐயர் — பாட்டு,

(இமை. நிரு.)

## நாவலர் பேச்சுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்

நேற்றுமுன்தினம் கோப்பாய் தெற்கு கற்பகவிநாயகர் ஆலய மண்டபத்தில் இருபாலை சைவபரிபாலன சங்கத்தாரால் நாவலர் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

இப்பேச்சுப் போட்டியில் பரிசுபெற்ருேர் விபரம் வருமாறு: ஆரம்ப பிரிவு; து மைதிலி, இ மாலினி, ச வைத்தியநாதன், கீழ்ப்பிரிவு வஸந்தா, சி கருணைநந்தன், க பாவனிதிகி, மத்திய பிரிவு- பொ தங்கேஸ்வரி, சபேசன், ச கிருஷ்ணவேணி, மேற்பிரிவு- ச வரதாம்பிகை க சிறிகுமாரி.

## அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செவ்.

''சலவைத் தொழில் செய்வதற்குரிய உபகரணங்கள், அத்தியாவசிய மூலப்பொருட்களைப் பெறுவதில் சிரமம் ஏற்படுவதால் தொழில் பாதிக்கப்படுகின்றது''

இவ்வாறு குறிப்பிடும் மகஜர் ஒன்றை வடமராட்சிச் சலவைத் தொழிலாளர் சங்கத்தினர் உள்நாட்டு வெளிநாட்டு அமைச்சர் திரு ரி பி இலங்கரத்தினவிடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்.

ருர்கள். மயக்க மாத்திரைகளைச் சாப்பிடுகிருர்கள், முடிவில் அதிலும் ஏமாற்றம், இப்படி அவர்கள் திகைக்கும் சமயத்தில் தான் இறை அருளால் அங்கு சென்றேன். 'ஹிப்பீஸ்' என்று கூறப்படும் அவ்வாலிபர்கள் பால் அன்புகாட்டி தட்டிக்கொடுத்து யோகாசனங்கள், ஜயம், தியானம் முதலியவற்றை விளக்கியதும், அவர்கள் முழுமனதுடன் இப்புது வழியை ஏற்ருர்கள். பல்லாயிரக்கணக்கான அமெரிக்க வாலிபர்கள் இம்முறையில் நன்மை கண்டு இதில் ஈடுபட்டு முற்றிலும் மாறிவருகிருர்கள்' என்று சுவாமி சச்சிதானந்தா வரவேற்புக்கு அளித்த பதிலில் குறிப்பிட்டார்.

அமெரிக்காவிலே சுவாமி அவர்கள் மிகப்பயனுள்ள பணி செய்வதாகவும், பல ஊர்களில் அவருக்கு கௌரவப் பிரஜை' என்ற பட்டம் அளித்திருப்பதாகவும், ரிஷிகேசம், திவ்ய ஜீவன சங்கத் தலைவர் சுவாமி சிதானந்தா அவர்கள் நேரில் பார்த்துவிட்டு தெரிவித்ததை, கொழும்பு கிளைச் சங்கத் தலைவர் திரு. ஏ. ஸி. நடராசா எடுத்துக்கூறி இந்து சமய உண்மைகள், உலகமனைத்துக்கும் உய்யும் வழிகாட்டும் காலம் வருமென்று மகான் அரவிந்தகோஸ் கூறிய தீர்க்க தரிசனம் இப்போது சுவாமி மூலம் உண்மையாகி வருவதாகச் சொன்னர்.

திருந்திய அமெரிக்க வாலிபர்கள் எல்லாரும் சுத்த சைவமயம். முட்டைகூடச் சாப்பிடுவதில்லை. ஒருசமயம் விமானத்தில் சுவாமியுடன் நான்கு அமெரிக்க சீடர்கள் பிரயாணம் செய்கையில், அவர்கள் சைவ உணவு வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். பின்னர் விமானத்தில் ஏறிய நான்கு வந்து நமக்கெல்லாம் யோக வழிகளைக் கற்பிக்கலாமென்று சுவாமி அவர்கள் கூறினர். ஆனல் அவர்கள் ஏற்கனவே இந்தப்பணியில் இறங்கிவிட்டதை அன்றே காணக்கூடியதாக இருந்தது ஐ நா விலிருந்து இரண்டு மாத விடுதலையில் சுவாமியுடன் வந்துள்ள அந்த ''அம்மா'' பேசிய பேச்சு இதை நிரூபித்தது. இத்தாலியைச் சேர்ந்த அவர் ஒரு கத்தோலிக்கராம். 'சுவாமிடம் உபதேசம் பெற்ற பின்பே நான் உண்மையில் ஒரு கத்தோலிக்கரானேன். 'கதாலிக்' என்ருல் 'முழுதும் உண்மை 'எல்லாம் சம்மதம்' என்று பொருள். இந்து தத்துவங்களை சுவாமி மூலம் அறிந்ததும், என் மனம் இவ்விதம் விரிவடைந்து உண்மைக் கத்தோலிக்கரானேன்'' என்று 'அம்மா' தெரிவித்து சுவாமி அவர்கள் வத்திக்கானில் பாப்பரசரைக் கண்டதாயும். சுவாமியின் பணிகளைப் பற்றியும் இயக்கம்பற்றியும் பாப்பரசர் வெகுநேரம் ஆர்வத்துடன்கேட்டறிந்ததாகவும், சமயத்திலே அமெரிக்க வாலிபர்கள் நம்பிக்கை இழந்து வரும் நிலையில். சமயத்தால் எவ்வளவு மேலான பயனும் இன்பமும் காணலாமென்பதை சுவாமி நேரில்காட்டி, பல சமயங்களிடையே ஒரு சமரசத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்திவருவதாயும், சுவாமி அவர்கள் இக்காலத்துக்குத் தேவையானபடி இறைவனல் அனுப்பப்பட்ட மேலான திருத்தூதர் என்றும் சொன்னர். கடைசியில் ஓர் அமெரிக்க சிஷ்யை 'ஹரி ஓம்' என்ற பஜனை செய்ய. எல்லாரும் அவரைப் பின்பற்றி பஜனைசெய்தனர். இது நம்பமுடியாத ஒரு காட்சியாக இருந்தது.

## பாடசாலைகள் இணைந்து இயங்க உத்தரவு

பருத்தித்துறை, திங்கள்

கரவெட்டி திரு. இருதயக் கல்லூரியும் வதிரி ரோமன் கத்தோலிக்க பாடசாலையும் அடுத்தாண்டு தைமாதம் தொடக்கம் ஒன்ருக இணைந்து இயங்குவதற்கான உத்தரவு கிடைத்துள்ளது.

இரு பாடசாலைகளும் ஒன்ருகக் கணிக்கப்படுமெனினும். ஒரே அதிபரின் கீழ் ஒரே பாடசாலையாக இரண்டும் இயங்கும். கனிஷ்ட பிரிவு ஒரு தலைமையாசிரியையின் நிர்வாகத்தில் இருக்கும். அநேகமாக எண்டரம் தர மாணவர் தொகை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதால், மேலதிக விஞ்ஞானகூட வசதிகள் செய்யவேண்டிய அவசியம் ஏற்படலாமெனத் தெரிகிறது. மேலும், இதுவரை இப்பாடசாலைகளுக்கான ஒரு பொது விளையாட்டு மைதானம் இல்லாத குறையைக் கூடியவிரைவில் நிவர்த்திப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள விருப்பதாக திரு. இருதயக்கல்லூரி அதிபர் திரு, தோமஸ் ஜப்பின் கூறுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org